



# ஞானச்சுடர்

## மாசி மலர் 2003




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு — 2 சுடர் 62

2003 மாசி

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| மதி கொண்டு விதி வெல்லும் வழி | 1 - 2 |
| அகவை 79 ஐக்காணும் தங்கத்தலைவி...... | 3 - 6 |
| வள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறி | 7 - 8 |
| சைவங்காத்த மங்கையர் திலகங்கள் | 9 - 11 |
| உலகம் உய்ய ஒரு திருமுருகன்...... | 12 - 14 |
| முருகனையே முழு முதற் கடவுளாய்ப்...... | 15 - 17 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்...... | 18 - 21 |
| சைவசித்தாந்த நோக்கில்..... | 22 - 24 |
| சந்நிதி வெண்பா | - 25 |
| ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் | 26 - 27 |
| கிளி சொன்ன கதை | 28 - 30 |
| அகந்தையை அழிக்கும்...... | 31 - 35 |
| நாம் செய்ய வேண்டியது...... | 36 - 37 |
| ஆத்திசூடி | - 38 |
| சந்நிதியான் | 39 - 42 |
| அரை நிமிட நேரம் | 43 - 44 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/- ரூபா

வருடச்சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு: அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்

தொண்டைமானாறு.

உ

சிவமயம்

## சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்

(சமாதான நீதிபதி, பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்)

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவையினரால் மாதம் தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் மாத சஞ்சிகை தனது ஐந்தாவது வயதைப் பூர்த்தி செய்து கொண்டு ஆறாவது வயதில் காலடி வைப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இது ஒரு பெரும் சாதனையாகும். மாதம் தோறும் இம்மலர் குறிப்பிட்ட நேரத்தில் எமக்குக் கிடைத்து விடும். அதில் சமயக்கருத்துக்களைத் தாங்கி பாமர மக்களும் புரியக்கூடிய வகையில் மிகவும் எளிய வசன நடையுடன் ஞானச்சுடர் வெளிவருவது அனைவரும் போற்றக் கூடிய ஒரு விடயமாகும்.

மேலும் இச்சஞ்சிகை இன்னும் பல ஆண்டுகள் துடிப்புடன் தனது பணியைச்செய்ய எல்லாம் வல்ல வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரியம்பாளை வேண்டிப் பிரார்த்தித்து எனது உள்ளார்ந்த ஆசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

" எல்லோரும் இன்புற்று வாழ்க "

சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர்

# " ஞானச்சுடர் "
## தை மாத வெளியீடு

### வெளியீட்டுரை:-

மலருக்கான வெளியீட்டுரையை திரு. ஆறு. திருமுருகன் அவர்கள் மேற்கொண்டார்கள். 1998 ஆம் ஆண்டு ஞானச்சுடர் முதன் முதலாக வெளியிடப்பட்ட பொழுது அதில் கலந்து கொள்ளும் பாக்கியம் தனக்குக் கிடைத்தது பற்றியும் அன்று தொடக்கம் மலர் தவறாது வெளிவந்து கொண்டிருப்பது பற்றியும் குறிப்பிட்ட ஆறு. திருமுருகன் வெளிநாட்டில் வாழும் பல இந்துக்களின் இல்லங்களில் இந்த மலர் பெருமதிப்புடன் பேணப்படுவது பற்றியும் சபையில் உள்ளவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் ஆதரவில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகத்தினரும் ஞானச்சுடரைப் பின்பற்றி " அருள் ஒளி " எனும் ஒரு சமய சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்துள்ளதையும் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

### மதிப்பீட்டுரை:-

மதிப்பீட்டுரையை யா / நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு. ஆ. சிவநாதன் அவர்கள் வழங்கினார்கள். ஆச்சிரமம், பேரவை தொடர்பாக இடம் பெற்றுக்கொண்டிருக்கும் அனைத்துச் செயற்பாடுகளும் சந்நிதியானின் திருவருள் காரணமாகவே இடம் பெற்று வருகிறது என்பதை தனது ஆரம்ப உரையில் சிவநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மலரில் இடம் பெறுகின்ற கட்டுரைகள் ஒவ்வொன்றும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு எமக்கெல்லாம் வழிகாட்டுகின்றவையாக அமைந்துள்ளதை கட்டுரைகளை ஆதாரமாகக்கொண்டு வெளிப்படுத்தினார்கள்.

ஞானச்சுடரை ஏனைய சஞ்சிகைகள் போன்று கணிப்பிட முடியாதென்றும் இதற்கு பணத்தாலோ அல்லது வேறு அளவீடுகளாலோ பெறுமதி போட முடியாதென்றும் இதனைப் பயன்படுத்துபவர்கள் ஒரு பொக்கிஷமாகவே கருதுகின்றனர் எனவும் குறிப்பிட்டார்கள்.

மலரில் இடம் பெற்ற கட்டுரைகள் ஒவ்வொன்றினையும் குறிப்பிட்டு அவற்றின் தனித்துவத்தையும் அடியார்களுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

# சுடர் தரும் தகவல்

ஆலயத்திற்குச் செல்லுதல், ஆண்டவனைத்தரிசித்தல், தரிசிக்கும் பொழுது சரியான நடைமுறையைக் கையாளுதல் போன்ற விடயங்களில் எமது சமயத்தவர்கள் நலிவுற்றவர்களாகவே காணப்படுகின்றனர் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது.

இந்த விடயங்களுடன் ஆலயச்சுத்தம் என்ற விடயத்திலும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது ஆலயம் எப்பொழுதும் சுத்தமாகவே காணப்பட வேண்டும், அதனைச்சுத்தமாக வைத்திருப்பது அனைவரதும் கடமையாகும்.

ஆலயத்திற்குச் செல்வதனால் எமக்கு என்னென்ன பயன்கள் கிடைக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கின்றோமோ அத்தகைய பயன்கள் எல்லாம் எமக்குக்கிடைக்க வேண்டுமானால் அதற்கு ஆலயச்சுத்தமும் அவசியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த விடயத்தில் தமிழகத்தில் நிகழ்காலத்தில் பல ஆலயங்களில் உள்ள நிலமைகளுடன் ஒப்பிடுமிடத்து எமது நாட்டிலுள்ள ஆலயங்களின் சுத்தம், சுகாதாரம் என்பன ஓரளவேனும் சிறப்பாகக் காணப்படுவது ஒரு முன்னேற்றமான அம்சமாகும். இத்தகைய சிறப்பான சூழ்நிலைகள் தொடர்ந்தும் பேணப்படுவதில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் தொடர்ந்தும் கவனம் செலுத்துவது அவசியமானதாகும்.

'ஆலயச்சுத்தம் ஆண்டவன் தரிசனம்' 'சுத்தம் பேணி இறையருள் பெறுவோம்' போன்ற வாக்கியங்கள் தமிழ் நாட்டின் பல ஆலயங்களில் தொங்கவிடப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது ஆலயச்சுத்தம் அங்கே மோசமடைந்துள்ளது என்பதே இதன் அர்த்தமாகும். இதற்கு அதிக சனத்தொகை, அறியாமை போன்றவை காரணங்களாக அமையக் கூடும். ஆனாலும் எந்தவிலை கொடுத்தாயினும் ஆலயச் சுத்தத்தையும், சுகாதாரத்தையும் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமானதாகும்.

நல்லவற்றைச் செய்கின்ற இடமாக ஆலயத்தைப் பயன்படுத்தத் தவறும் பொழுது அங்கே குடியிருக்கும் ஆண்டவனிடமிருந்து நாம் நல்லனவற்றை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும் என்பதை மனிதன் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

உ

# தேறுதல் தந்திடுவாய்!

இராகம் : ரஞ்சனி தாளம் : ஆதி

**பல்லவி**

சந்நிதியில் வீற்றிருந்து சங்கடங்கள் தீர்த்தருளும்
சக்தியின் மைந்தனே வண்ணமயில் வாகனனே

**அநுபல்லவி**

பன்னிரு கரத்தாலே பல்வினை தீர்த்திடுவாய்
உன்னிரு தாள்பணிந்தோம் உலகையே காத்திடுவாய்

**சரணம்**

சந்நிதியானை வணங்க சந்ததி பெருகிடுமே
முந்தை வினைகளெமை முற்றும் விலகிடுமே
சிந்தையில் நல்லெண்ணம் சிறந்து விளங்கிடுமே
வந்தனை செய்கின்றோம் வழியெமக்கு காட்டிடுவாய்

தந்தை உபதேசம் செய்த குருநாதா
சிந்தையில் சமாதான எண்ணத்தை நீயும்தா
பாரிலே தமிழர் படுதுன்பம் நீங்கவே
நேரிலே வந்தெமக்கு தேறுதல் தந்திடுவாய்

குகதாச சர்மா சிவகுமார்

எண்ணம், சொல், செயல் அனைத்தும் தூய்மையாக இருக்க வேண்டும். அதுவே உண்மையான பக்தி.

வழுக்கி விழுவதால் ஏற்படும் காயத்தை மருந்து போட்டு சுகப்படுத்தி விடலாம். ஆனால் எமது வாய்ப்பேச்சினால் மற்றவர்களுக்கு காயத்தை ஏற்படுத்தி விட்டால் அதை மாற்ற முடியாது. எனவே நீ கதைக்கும் போது உனது சொற்களின் தாக்கத்தை அறிந்து கொள்.

# மாசி மாதச்சிறப்புப் பிரதி
## பெறுவோர் விபரம்

திரு. த. விவேகானந்தன்
( சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை )

திரு நா. சந்திரசேகரம் ( பொருளாளர் )
( வேவிலந்தை முத்துமாரியம்மன் தேவஸ்தானம், அல்வாய் )

திரு சி. பத்மநாதன் J. P.
( கனன் போட்டோ பிரதி நிலையம், பருத்தித்துறை )

திரு பொ. ஸ்ரீஇராமச்சந்திரன்
( பொது முகாமையாளர் வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. ச. )

திரு தா. கெங்காதரன்
( கஜன் மோட்டோர்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் )

திரு V. S. P. குமார் ( ஸ்ரீகுமார் )
( உரிமையாளர் கல்பனா ஸ்ரோர்ஸ் அச்சுவேலி )

நிர்வாகி
( ரலன்ற் கல்வி நிறுவனம் கரவெட்டி )

திரு சி. கணேஸ்
( சிதம்பரப்பிள்ளை, புத்தகசாலை நெல்லியடி )

திரு வ. நந்தகுமார்
( அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு )

உரிமையாளர்
( ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி )

திரு க. இரத்தினசிங்கம் J. P.
( இளை. கிராமசேவையாளர் கரணவாய் மத்தி )

திரு க. குணலிங்கம்
( கரணவாய் மத்தி )

திரு. N. இரவீந்திரன்
( மக்கள் வங்கி உதவி முகாமையாளர் உரும்பராய் )

திரு க. யோகேந்திரநாதன்
( கிராம உத்தியோகத்தர் குடத்தனை )

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம்
( K. K. S. வீதி யாழ்ப்பாணம் )

திரு செ. சந்திரமூர்த்தி
( தலைவர் உடுப்பிட்டி ச. ச. நிலையம் )

திரு அ. த. க. கிருஸ்ணராஜா
( சமாதான நீதவான் உரும்பராய் )

திரு சி. பஞ்சலிங்கம்
( ஞான வைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு )

செல்வி தெவேந்திரா செளமியா
( ஒஸ்கா வீதி, உரும்பராய் )

திருமதி S. கனகராசா
( அதிபர் அச்சுவேலி மத்திய கல்லூரி )

திரு செ. அப்பாத்துரை
( இளைப்பாறிய கூ. ச. முகாமையாளர் இருபாலை )

திரு இ. குமாரதாசன்
( இளை. பிராந்திய மருந்தாளர் யாழ். )

திரு சி. குகதாஸன்
( தேவாலய வீதி, சங்கானை )

உரிமையாளர்
( உதயா பேக்ஹவுஸ் வல்லை வீதி, சங்கானை )

தலைவர் / செயலாளர்
( விநாயகர் சனசமூக நிலையம் பத்தமேனி )

திருமதி த. சுரேந்திரநாதன்
( அதிபர் கெருடாவில் இ. த. க. பாடசாலை )

அதிபர்
( தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம் )

திரு செ. சம்பந்தநாதன்
( இளைப்பாறிய முகாமையாளர் இலங்கை வங்கி )

திருமதி நிர்மலா குகதாசன்
( புதுவளவு இடைக்காடு )

திருமதி சண்முகவடிவேலு
( எழுது வினைஞர் சுகாதாரத் திணைக்களம் யாழ். )

திரு பொ. வீரவாகு
( பத்தமேனி அச்சுவேலி )

திரு சி. தங்கராசா J. P.
( சிறுப்பிட்டி )

திரு சி. மகாலிங்கம் J. P.
( மலையன் தோட்டம், கொற்றாவத்தை )

திரு சு. சிவதாசன் G. S.
( புன்னாலைக் கட்டுவன் வடக்கு )

தலைவர் / செயலாளர்
( கலைவாணி ச. ச. நிலையம் தொண்டைமானாறு )

திரு க. கேதீஸ்வரன்
( வர்த்தக வங்கி யாழ்ப்பாணம் )

திருமதி நவரெட்ணம்
( லண்டன் )

திரு சு. செல்வரெத்தினம்
( K. K. S. வீதி, சுன்னாகம் )

திரு ஜெயகிருஸ்ணா
(K. K. S. வீதி, சுன்னாகம் )

உரிமையாளர்
( புகழ் ஸ்ரோர்ஸ் K. K. S. வீதி. சுன்னாகம் )

திரு ஐ. லோகஞானம்
( பிரதம அஞ்சல் அதிபர் சுன்னாகம் )

உரிமையாளர்
( மங்கை சில்க்ஸ் பட்டுச்சோலை சுன்னாகம் )

உரிமையாளர்
( உதயன் விற்பனை நிலையம் சங்கானை )

புவனேஸ்வரி பாலகிருஸ்ணன்
( தேவாலய வீதி, சங்கானை )

திரு அ. இராஜகோபால்
( 271, கஸ்த்தூரியார் வீதி யாழ்ப்பாணம் )

உ

# மதி கொண்டு விதி வெல்லும் வழி

இராசையா ஸ்ரீதரன்

மனித வாழ்வில் நியதி என்று ஒன்று இருக்கின்றது. அது எவராலுமே மாற்றவோ, திருத்தவோ, அழிக்கவோ, மறைக்கவோ முடியாத ஒன்று. இந்தக் காலத்தில், இந்த வயதில், இந்த நிகழ்வு நடக்கத்தான் வேண்டுமென்றிருந்தால் அது நடந்தே தீரும். அதில் எள்ளளவும் சந்தேகமேஇல்லை. அதுதான்நியதி அதை விதி என்றும் சொல்லலாம்.

இதைத்தான் கொழும்புத் துறைப் பெரியாரும் தீர்க்கதரிசியுமான யோகர் சுவாமிகள் '' எப்பவோ முடிந்த காரியம் '' என்று அனுபவ ரீதியாகக் கூறியிருக்கின்றார். இந்த நியதிக்கு யாருந் தப்பமுடியாது. எல்லோரும் அதற்குக் கட்டுப்பட்டேயாக வேண்டும். அதுதான் தலைவிதி எனப்படுகிறது.

### சர்வம் சக்தி மயம்

இந்தப் பரந்த நிலவுலகத்தைப்படைத்த பரம்பொருளான பரமேஸ்வரன் தன்னுடைய சக்தியாக உமாதேவியாரைக் கொண்டே சகல வல்லமையும் உடையவராகத் திகழ்கின்றார். ''சக்தி இருந்தால் செய்; இல்லையேல் சிவனே என்றிரு '' என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே சக்திதான் உயிர்மூச்சாக விளங்குகின்றது. அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாக விளங்கும் ஆதிபராசக்திதான் இந்த உலகத்துக்கே கருத்தா. மின்சாரம் என்ற சக்தி இருந்தால் தான் ஒளி கிடைக்கும். இல்லையேல் இருள் தான். 'சர்வம் சக்தி மயம்' நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத்தீர்ப்பு; என்றபடி உலகமே சக்தியில் ஒடுக்கம். சக்தி இறைவனில் ஒடுக்கம். அந்த இறைவன் தான் நம்மையெல்லாம் இயக்குகின்றான். நாம் ஓடி ஆடித் திரிகின்றோம். அவன் ஆடாவிட்டால் நாம் இயங்க முடியாது.

### கடவுள் ஒருவரே

' ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே ' ' அவனன்றி ஓரணுவும் அசையாது. ' ' அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பதற்கிணங்க நாம் இந்தப் பூவுலகில் வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழலவிட்டுள்ளோம். நாங்கள் ஒரு பானையைப் பார்க்கின்றோம். அதை வனைந்த குயவன் ஒருவன் இருக்கத்தான் செய்கின்றான். அதேபோல இந்த உலகத்தையும் படைத்தவன் ஒருவன்

இருக்கின்றான். அவன்தான் கடவுள். அவரது பேரருட் கருணையினால்தான் நாம் இப் பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக் கின்றோம்.

## மதியினால் விதியை வெல்லலாம்

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடனாகும். எதுஎப்படி இருந்தாலும் விதியை வெல்ல முடியாது. அந்த விதியை மதிகொண்டு வெல்வதற்கு அதை விதித்தவன் ஒருவனால்த்தான் முடியும்.

'தினைவிதைத்தவன் தினை யறுப்பான்; வினைவிதைத்தவன் வினையறுப்பான்.' இதுதான் நியதி. இதைப் புரிந்துகொண்டால் சரி. அதுதான் உலக நீதியும் நியதியும் கூட. பச்சைக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்த்தால் உலகம் பச்சை நிறமாகத்தான் தெரியும். சிவப்புக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பார்த்தால் சிவப்பு நிறமாகத்தான் தெரியும். அங்கே பார்க்கும் கண்கள் ஒன்றுதான். கண்ணாடிதான் வேறு அதே போலத்தான் வாழ்க்கையும் சார்ந்ததன் வண்ணமாகவே அமையும்.

## பக்தி வலை

பதினாறு வயதுடைய மார்க் கண்டேயர் தனது தவ வலிமை யினால், இறை தியானத்தினால், பக்தி வைராக்கியத்தினால் விதி யையே மாற்றியமைத்து விட்டார். காலனையே சிவனின் காலால் உதைக்கச் செய்தது இவரது பக்தி. ''அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாழ்; பக்தி வலையிற் படுவோன் காண்க.'' ஆகையினால் உண்மையான பக்திக்கு இறைவன் பணிந்தே வருவான். அருள் நிச்சயம் தந்தே தீருவான் இது கடவுளின் இலக்கணம்,

## ஆன்ம ஈடேற்றம்

தனது கற்பின் வலிமையினால் கணவனின் உயிரையே காலனிடம் இருந்து மீட்டெடுத்தாளாம் சாவித்திரி, அங்கும் அன்பின் வலிமையே வெற்றிக்குக் காரணம், எனவே கடவுளிடம் பக்தி செலுத்துவதன் மூலம் விதியையும் வெல்லலாம். இறையருள் மூலம் மதிகொண்டு விதி வெல்லும் வழி யாதெனில் அன்பு ரீதியாகத் தொண்டு செய்வதே யாகும். சிவதொண்டு செய்வதன் அர்த்தம் ஆன்ம ஈடேற்றமே. அந்த ஆத்ம திருப்திக்கு ஆண்டவனின் அருட்கருணைத்திறன் வேண்டும். அந்தத் திருவருள் பேற்றுக்கு அவனருளையே நாடி நிற்போமாக.

★ சிரிப்பும் அழுகையும் வாழ்க்கையின் தோழர்கள். ★

# அகவை 79ஐக் காணும் தங்கத்தலைவி

## துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி

## தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி. அவர்கள்

கனக. நாகேஸ்வரன் M. A.



"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தம்கருமமே
கட்டளைக் கல்,,
(தெரிந்து தெளிதல் 505)

என்பது தமிழ்மறை.

இக்குறளை உன்னி நினைக்க வேண்டிய சூழ்நிலை இன்றுள்ளது. அன்னைதங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் என்றும் பெருமையும் பீடும் உடையவர். செய்காரியங்களின் சிறப்பினாலும் நேர்த்தியினாலும் என்றும் பெருமைபெறுபவர். நிலைபேறுடைய பெருமைமிக்க பெரும் பணிகளியற்றி என்றென்றும்

★ உள்ளத்தோடு போராடுவதே உயர்ந்த போராட்டமாகும் ★

பெயர்பெற்றுத் திகழ்வது தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் அறங்காவலர் சபை. அதன் அச்சாணி சிவத்தமிழ்ச்செல்வி. கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் எம்மத்தியிலே சிவத்தமிழ்செல்வி அவர்கள் 'வாழ்கிறார்கள்' என்று கூறப்படுவது தான் மிக்க பெரும் பெருமையுடையது. மாண்பினைத்தருவது, என்றும் ஆனந்தமான மனமகிழ்வைத் தருவது.

சிவத்தமிழ்ச்செல்வியின் 'கல்விப்பெருமை' பேசப்பேச இன்பந் தருவது: யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான், மட்டுவில் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மகாவித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் ஆகியோர் வழிவந்த கல்விப்பாரம் பரியத்தில் புடம் போடப்பட்டு ஒளிவீசும் சுடர் நமது சிவத்தமிழ்ச்செல்வி. அது ஞானச் சுடர்; சிவஞானப் பெருஞ்சுடர்; சமூகஜோதி; ஆதரிக்கும் பேரொளி.

அறிஞர்கள், அதிபர் தெ. து. ஜெயரத்தினம், த. சண்முகசுந்தரம், உடுவில் தருமலிங்கம். தெல்லிப்பழை சிவமகாராசா ஆகியோருடன் பேராசிரியர்கள் பொ. பாலசுந்தரம் பிள்ளை (துணைவேந்தர்) சு. வித்தியானந்தன், கா. சிவத்தம்பி, அ. சண்முகதாஸ், நந்தி சிவஞானசுந்தரம், நல்லைஆதீன இரண்டாவது குருமகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள், அருட்கவி சீ. விநாசித்தம்பி, மாவை சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் போன்றோரின் அன்பும் மதிப்பும் அங்கிகாரமும் ஒருங்கே பெற்று மிளிர்பவர் கலாநிதி, தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்-கல்வித் தகைமைப் பெருமையுடன் ஆசிரியப்பணியிலே உயர்ந்து சொற்பொழிவு--நூல் வெளியீடு-கட்டுரையாக்கம்- ஆய்வரங்கு -- கருத்தரங்கு --மாநாடுகள்--திருவிழாக்கள் நடத்துதல் என்ற அனைத்துக்கும் 'அமைப்பாளர்' என்ற சிறப்புடன் கருமமாற்றிப் பெரும் புகழையீட்டித் தரத்தக்கதாய் அமைத்துப் பெருவெற்றி கண்டவர் எங்கள் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்கள்.

## எழுத்துப்பெருமையும் பேச்சுப்பெருமையும்:-

சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் எழுத்துவன்மையும் பேச்சாற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற சிறப்புமிக்கவர். சைவ சித்தாந்தம், பெரியபுராணம், மெய்கண்டசாத்திரங்கள் . திருமுறைகள்; பெண்ணடியார் மாண்புகழ் (திருத்தொண்டு) மாநாட்டுப் பேருரைகள், தலைமையுரைகள், தொகுப்புரைகள்,

நூலாக்கங்கள் என்று பல்வேறு முயற்சிகளிலேயும் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர். பெண்மைக்கு இணையுண்டோ! என்னும் நூல் ஆய்வுநிலைப்பேறு பெற்றது.

ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பட்டதாரி மாணவமாணவியர், பௌராணிகர், பொதுமக்கள், ஆர்வலர்களனைவரையும் ஈர்த்தும் அறிவுறுத்தியும் இத்தகு நல்லபணிகளிலே ஈடுபடவைத்துச் சைவத்தையும் தமிழையும் பண்பாட்டையும்பேணிவளர்த்து வருபவர். இவற்றை ஓயாது பேணுபவர். கம்பராமாயணம் பெரியபுராணம், மகாபாரதம், திருவாசகம், திருக்குறள் இலக்கிய, சமயப் பேருரைகள் தனித்துவமிக்கவை. காரைநகர் 'மணிவாசகர் 'சபையில்' சிவத்தமிழ்ச் செல்வியின் திருவாசகப் பேருரையை மெச்சாதாரில்லை. இன்று உலகின் சைவாலயங்களிலும், பல்கலைக்கழகங்களிலும், மன்றங்கள், சங்கங்கள், சபைகள், கழகங்களிலும் பேச்சாளப் பெருமக்களாய்த் திகழும் பலர் சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பேச்சாலும், எழுத்தாலும் கவரப்பட்டவர்களே என்பது பேருண்மையாகும்.

## தலைமைத்துவப்பெருமையும் நிர்வாகப்பெருமையும்:-

அறத்தைப் பரிபாலிப்பது என்பது பெரும்பொறுப்பு; பற்றற்ற தூய உள்ளப்பாங்கு வேண்டப்படும். குற்றமற்ற வாழ்வு, சீரிய ஒழுக்கம், மேதாவிலாசம், முன்மாரி நடத்தைகள் என்பனவே தரும சிந்தையின் தகைமைப்பாடுகள். சினமும், பொறாமையும் விலக்கப்பட்டு அன்பும், அரவணைப்பும் ஆன்மனில் கோலோச்ச வேண்டும். வெறுப்புணர்வும் கடுஞ்சொல்லுங் கூட விலக்கிவிட வேண்டும். இவை மூலாதாரத் தேவைகள். இத்தகு நற்குண நற்செய்கைகள் ஒருங்கே வாய்க்கப் பெற்ற பெருமாட்டி சிவத்தமிழ்ச்செல்வி என்பதாலேயே நிர்வாகத்தில் தீர்மானங்கள் பெரும்பாலும் ஏகோபித்தே மேற்கொள்ளப்படுகின்றன. கூட்டுப்பொறுப்போடும் புரிந்துணர்வோடும் நடந்தேறும் நிர்வாகத்தனித்துவம் மகத்துவம் மக்கள் மன்றமான 'பாராளுமன்றம்வரை' பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தியது என்பது தானே உண்மை வரலாறு!? ஜனநாயகப் பண்புகளின் வளர்ப்புப் பண்ணையே தெல்லிப்பழை துர்க்கையம்பாள் அறங்காவலர் சபையின் கூட்டங்கள் என்றால் அதிலே மிகையொன்றுமில்லை.

## அறப்பணிகளின் பெருமையும் துர்க்கையம்மன் ஆலயவிழாக்களின் பெருமையும்:-

தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலிலே திருவிழாக்கள் என்றால் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதற்கும் ஏன் உலகுக்

★ நல்ல நண்பர்களின் நட்பு நலத்தைக் கொடுக்கும். ★

கும் மகிழ்ச்சிதான். காரணம்பல. அவற்றிலொன்று, பெண்கள் அனைவரும் துர்க்கையம்மன் திருவிழாவிலே மனமகிழ்ச்சியுடனும், ஆனந்தத்துடனும் பங்கேற்றுக் கொள்ளுவதாகும். மிகுந்த உற்சாகத்துடன் மாதரின் உளவிருப்பிற்கேற்றபடி துர்க்கையம்மனைத் தொழுதிறைஞ்சி வேண்டும் வரங்களனைத்தையும் பெற்ற வரலாறு இன்றும் இவ்வாலயத்திற்கு உண்டு. சைவசித்தாந்த 'வாழ்க்கை நெறி'யும் ஆரம்பமும் பெண்களின் சமயப் பற்றிலும், பிடிப்பிலும், ஈடுபாட்டிலுமே உண்டானது. காரைக்காலம்மையாரின் வாழ்க்கை வரலாறு இவ்விடத்தில் சிந்திக்கத்தக்கது. மாங்கல்யம் காப்பவள் ஸ்ரீ துர்க்காதேவி என்ற பரிபூரண நம்பிக்கை எமது பெண்களிடத்துண்டு. திருவிழாக் காலங்களிலே நாதஸ்வரம், தவில், பண்ணிசை, இன்னிசை, கதாப்பிரசங்கம், பேருரைகள் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் தெற்கு வீதியிலமைந்துள்ள திருமுறை மடத்திலே இடம்பெறும். அடியார்கள் விழாக்கண்டின்புறுவது மட்டுமன்றி அன்னதானத்திலேயும் பங்குகொண்டு (வயிற்றுப்பசி நீங்கி) அமுதருந்திஆறுதல்பெற்று வீடேகும் திருப்தி இத் தேவஸ்தானத்திலுண்டு. நெல்லிப் பழைத்தண்ணீர் 'தண்' ணென்ற குளிர்ச்சி பொருந்தியது. நிலக்கீழ் நீராய்க் கிணறுகளில் இருந்து பெறப்படுவது.

[தொடரும்.

## சத்திய சாயி பாபாவின் நற்சிந்தனை

- தரக்குறைவான உலோகங்கள் அதிக ஒலியை எழுப்புகின்றன. தரத்தில் கூடிய பொன், ஒலி எழுப்புவதில்லை. அது போல் உண்மையான பக்தர்கள் எப்பொழுதும் நிசப்தமாக இருப்பார்கள்.
- பக்தி தலை போன்றது. கடமை உடல் போன்றது. கட்டுப்பாடு பாதங்களைப் போன்றது. பக்தியுடனும் கட்டுப்பாடுடனும் செய்யப்படும் கடமையினால் வெற்றி பெறுவது நிச்சயமாகும்.
- பணம் சம்பாதிப்பது மட்டும் கல்வியின் நோக்கமாக இருக்கக் கூடாது நல்ல குணங்களையும் பெற்று இருக்க வேண்டும்.
- இறைவனைப் பிரார்த்திப்பது உன் செயல். அவர் அருள் கிடைப்பது இறைவனைப் பொறுத்தது.
- நீ நினைப்பவற்றை இறைவன் எப்பொழுதும் அவதானித்துக் கொண்டு இருக்கிறார். உன் செயல்களை இறைவன் எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருக்கிறார் நீ கதைப்பதை இறைவன் கேட்டுக் கொண்டே இருக்கிறார் நீ ஒன்றையும் இறைவனிடம் ஒளித்து செய்ய முடியாது.

★ அமைதி குறையக்குறைய துன்பம் வளரும். ★

உ

# வள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறி

கா. கணேசதாசன் ஜே. பி.

ஒருவருக்கு-தான் வாழ்க்கை நடாத்துவதற்கு அறிவு இருந்து தான் ஆகவேண்டும் என்று அவசியம் கிடையாது. பழக்க வழக்கத்தினாலேயே பலர் பிறந்து இருந்து வாழ்ந்து மறைகின்றார்கள்.

அறிவு - பகுத்தறிவு - இல்லாத உயிரினங்கள் உலகத்தில் பிறக்கின்றன. உண்ணுகின்றன உறங்குகின்றன. இனத்தைப் பெருக்குகின்றன. காலம் வந்தால் மறைகின்றன. இத்தனைக் காரியங்களையும் அறிவில்லாத இனங்களாகிய அவை பழக்கத்தினால் தான் செய்கின்றன.

காலையில் வீட்டிலிருந்து மாட்டினை அவிழ்த்துவிட்டால் அந்தப் பசு சாயந்தரம் வரைக்கும் மேய்ந்துவிட்டு நேரே வீட்டிற்கு வந்துவிடுகிறது. இது பழக்கத்தினால் நடைபெறும் செயலாகும். அறிவு கொண்டு சிந்தித்து வெளியே போய் இந்த மாடு திரும்பி வருவதில்லை.

அதேபோல் பலர் பழக்கத்தினாலேயே பிறந்து வளர்ந்து திருமணம் செய்து குழந்தை குட்டிகள் பெற்று மறைகின்றனர். அறிவைப் பயன் படுத்திக் கொள்ளத் தெரியாமலோ அல்லது, அவசியம் இல்லை என்று கருதியோ பலர் காலம் தள்ளி வருகிறார்கள்.

''உங்களுக்கு அறிவு இருக்கிறதா?'' என்று ஒருவரையும் கேள்வி கேட்கக் கூடாது. அதை நாமே தெரிந்துகொள்ள வேண்டும். பிறரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளப்படுவது அல்ல அறிவு. உலகத்தில் முன்னோர்கள் அறிந்து சொல்லிய உண்மைகளை சிந்தித்துப் பார்க்காமல் ஒதுக்கி விடுவது புத்திசாலித்தனமாகாது.

பொருட்செல்வம் கொடுக்கக் கொடுக்கக்குறையும். ஆனால் அறிவுச் செல்வமோ கொடுக்கக் கொடுக்க வளரும். கற்றவர்களுக்கும் இன்பம் தரும். கற்றவர்கள் அறிவுச் செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். இவ்வாறு கற்றறிந்த அறிவுடையோருக்கு ஒரு காமம் உண்டு. ''கற்றோரைக் கற்றோரே காமுறுவர்'' என்பதுபோல கற்றவர்கள் ஒருவரை ஒருவர் விரும்புவார்கள். 'காமம்' என்ற சொல் - குறிப்

★ நேர்மையாகவும் தைரியமாகவும் இரு. ★

பிட்ட ஓர் இன்பத்தினை மட்டும் சொல்லுவதாகக் கொள்ளுதல் கூடாது. பொதுவாக ஆசைப்படு கின்ற அனைத்தையும் 'காமம்' என்ற சொல் குறிப்பதாகும்.

தாம் மகிழ்ச்சியும் இன்பமும் அடைவதற்குக் காரணமாக இருக்கின்ற கல்வி அறிவு உலக மக்கள் இன்புறுவதற்கும் காரண மாக இருக்கின்ற உண்மையினை உணர்ந்து கற்றறிந்த மேதை கள் மேலும் மேலும் கல்வியில் 'காமுறுவார்கள்'

''தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.'' ( குறள் 399 )

இவ் வள்ளுவர் வாக்கிற் கமைய கற்றறிந்தவர்கள் காமுறு வார்கள் என்பதுவும், கற்றறிவு இல்லாதோர் காமுறுவதில் அர்த்தமில்லை என்பதுவும் மெய்ப்பிக்கப் பட்டுள்ளதல் லவா?

---

நாம் வாழ்க்கையில் எதைத் தேடிக்கொண்டு போனாலும் அது மனதுக்கு அமைதியையும், சந்தோஷத்தையும் தரவேண்டும் என்பதற்காகவே தேடுகின்றோம். இப்படி நமக்குக் கிடைக்கும் அமைதியும், சந்தோஷமும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றும் விரும்புகின்றோம். பதவி, பணம், அதிகாரம் இவற்றினால் தற் காலிகமான சந்தோஷம் கிடைக்கிறது. ஆனால், துன்பமும் கூடவே வந்து சேருகிறது இப்படிக் கிடைக்கும் யாவும் நிரந்தரமாக இருப் பதும் இல்லை.

மனதுக்கு அமைதி கிடைத்தால் மகிழ்ச்சியும் கூடவே வரும். இப்படி ஓர் அமைதி கிடைக்கத்தான் நாம் மனதைக்கட்டுப்படுத்து கின்றோம். இந்த முயற்சிக்கு இறைபக்தி அவசியம். மனதைக் கட்டுப்படுத்தி ஒருமுகப்படுத்தும் போது அமைதி கிடைக்கிறது. நாம் நிலையாக நிற்க வேண்டுமானால் அசையாத ஒன்றைக் கெட்டியா கப்பிடித்துக் கொள்கின்றோம். அதே போன்று எமது மனதில் அமைதி ஏற்படவேண்டுமானால் நிலையான பரம்பொருளை மனதில் நிறுத்தி அதனை இறுகப்பற்ற வேண்டும். அப்படி இறுகப் பற்றும் போது அந்தப் பரம்பொருளின் பெருமை மிகுந்த குணங்கள் நம்மை வந்து ஆட்கொள்ளும். இதனையே நாம் பக்தி என்று சொல்லுகின் றோம் ஆகவே நாம் இறைவன் மேல் பக்தி செலுத்துவதன் மூலம் சகல நன்மைகளையும் அடைவோம் என்பது திண்ணம்.

---

★ அறிவிற்கு அடையாளம் அடங்குதலே ஆகும். ★

உ (தொடர்ச்சி...

# சைவங்காத்த மங்கையர் திலகங்கள்

நா. நல்லதம்பி

## திலகவதியார்

திருவீரட்டானத்துறையிலே சிவத்தொண்டு செய்து வாழ்ந்த இரு சகோதரர்கள் திலகவதியாரும் திருநாவுக்கரசரும் ஆவர்.

இவர்களுடைய தாயார் மாதினியாரும் தந்தையார் புகழனாரும், இவர்கள் இளம்வயதினராக இருக்கும்போதே இறந்துவிட்டனர்.

திலகவதியாருக்கு விவாக நிச்சயம் செய்யப்பெற்றிருந்த கலிப்பகையார் போர்க்களஞ் சென்று இறந்துபோனார்.

தாய் தந்தையரையும் நிச்சயிக்கப்பெற்ற கணவனையும் இழந்த திலகவதியார். அக்கால வழமைப்படி கணவன் பிரிவையடுத்து உயிர்நீக்கத் துணிந்தார்.

திலகவதியாரையே தாயும் தந்தையுமாக எண்ணியிருந்த மருணீக்கியார் வேண்டுதலினால், தம்பிக்காகத் திலகவதியார் உயிர் வாழவேண்டியதாயிற்று.

இதனால் ஒருவருக்கொருவர் உதவியாகத் தவக்கோலம் பூண்டு இருவரும் வாழ்ந்து வந்தனர்.

ஆயினும், மருணீக்கியார் நிலையாமைக் கொள்கையுடைய சமணசமயத்துக்கு மாறிவிட்டார். அவர் அச்சமயத்திற் சேர்ந்து தருமசேனர் என்றபெயரோடு விளங்கினார்.

தம்பியின் நலனுக்காகவே உயிர்வாழ்ந்து கொண்டிருந்த திலகவதியாருக்கு மருணீக்கியாரின் இச்செயல் மிகவும் வேதனை தந்தது.

சமண சமயத்தவர் கூட்டத்திலே, அரசனின் மதிப்பைப்பெற்ற ஒரு தலைவராக விளங்கினார் தருமசேனர். அதனால் திக்கற்றவரான திலகவதியாருக்கு ஒன்றுஞ் செய்ய இயலாமற்போகவே, எல்லாம்வல்ல சிவபெருமானிடஞ் சென்று, தனது தம்பியாரை மீட்டுத்தருமாறு வழிபாடு செய்து வந்தார்.

சிவபெருமான் சிவனடியே தஞ்சமெனக்கொண்ட திலகவதி யாரின் வேண்டுதலுக்குத் திருவுளம் இரங்கினார்.

மருணீக்கியாருக்குத் தீராத வயிற்றுவலியை உண்டுபண்ணி னார். வயிற்றுவலிக்கு ஆற்றாது அலறித்துடித்தார் தருமசேனர். சமணர்கள் ஒன்றுகூடி மந்திரம் செபித்தும் மயிற்பீலியாற்றடவியும் வயிற்றுவலி நீங்கவில்லை.

அந்தநேரத்தில், தமக்கு ஒரு பற்றுக்கோடாக இருக்கும் தமக்கையாரான திலகவதியாரின் எண்ணம் வந்தது. எப்படியும் அக்காவிடம் போகவேண்டும் என்று முடிவெடுத்தார் மருணீக்கியார் மிகுந்த கட்டுப்பாடுள்ள சமணப்பள்ளியிலிருந்து எப்படித் தப்பிப் போவது? அங்கு சமையற்காரனாக இருந்த ஒருவனின் உதவியால் இரவோடிரவாக நடந்து, திருவதிகை என்னும் தலத்தில் வசித்து வந்த திலகவதியாரிடம் போய்ச் சேர்ந்துவிட்டார்.

தம்பியாரின் நிலைகண்டு மனங்கலங்கிய திலகவதியார் ஐந்தெழுத்தோதித் திருநீறுசார்த்திச் சிவனை வணங்கி நின்றார் மருணீக்கியாரின் உள்ளமெனும் கோயிலில் சிவசிந்தனை நிறைந்தது சிவனருள் பெற்றமருணீக்கியார் கூற்றாயினவாறு விலக்ககிலீர்......, என்னும் திருப்பதிகம் பாடினார்.

கூற்றா யினவாறு விலக்ககிலீர்
  கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே இரவும் பகலும்
  பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென்வயிற்றி னகம்படியே
  குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றே னடியேன் அதிகைக்கெடில
  வீரட் டானத் துறையம் மானே.

அப்பொழுது மருணீக்கியாரின் வயிற்றுவலி நீங்கியது சூலைநோய் நீங்கப்பெற்ற தம்பியாரை அழைத்துக்கொண்டு திலகவதியார் திருவீரட்டானேசுரர் ஆலயஞ்சென்று இறைவன்திரு வருளை நினைந்து மனங்கசிந்து வழிபட்டார்.

''நாவினிக்கப் பாடிய மருணீக்கியாரே, இனிமேல் நாவுக் கரசராக இருந்து எம்புகழ் பாடுவீராக'' என இறைவன் அருளிக் கூறினார். இஃதிங்ஙனமாகச் சமண சமயத்தை விட்டுச் சைவ

★ உண்மை கனமானது ஆகவே அதைச்சுமப்பவர் சிலரே. ★

சமயத்துக்கு மாறிவிட்டார் தருமசேனர் என்ற செய்திஅரசனுக்கு எட்டியது அதனால், தம்பியாரைச் சைவசமயத்துக்குத் திரும்பவுந் தந்த சிவனுக்குப் புகழ்மாலை சார்த்தித் திலகவதியார் மகிழ்ந்த வேளையில், அரசனின் கோபச்செய்தி அவர் காதுக்கு எட்டியது.

அரசன் என்ன தண்டனை தருவானோ எனத் திலகவதியார் அச்சங்கொண்டார். ஆனால், நாவுக்கரசரோ, அரசனின் ஏவலாளரை நோக்கி, ''நாமார்க்குங் குடியல்லோம், நமனை யஞ்சோம் ..'' என்று பதிகம் பாடி, அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்.

அதனால், மேலும் பயங்கொண்டார் திலகவதியார்.

அரசன் ஆணையை மீறிய நாவுக்கரசரைக் கைது செய்து, சுண்ணாம்பு அறையில் அடைக்கச் செய்தான் அரசன். காற்றுப் புக முடியாத அந்த அறையில், சிவனைத் துதித்துப் பாடிக்கொண்டிருந்தார் நாவுக்கரசர்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை இணையடி நீழலே.

என்னும் பதிகம் பாடினார்.

சுண்ணாம்பறை இறைவன் திருவடிநீழலாக, குளிர்ந்த தடாகமாக, மாலை நிலா ஒளியில் இளவெனிற் காலத்துத் தென்றற் காற்றின் சுகத்திலே வீணை நாதத்தில் திளைத்து இருந்தேன் என்கிறார் நாவுக்கரசர்.

இவ்வாறு நீற்றறையில் வேகாதிருந்த நாவுக்கரசருக்கு வேறும் பல தண்டனைகள் செய்தபோதும் அவர் தீங்கின்றிச் சிவனருளாற் சிறந்து இருந்தார்.

கடைசியாக, கல்லொடு கட்டிக் கடலில் விட்டார்கள். அப்பொழுது ''சொற்றுணை வேதியன் '' என்னும் பதிகம் பாடினார். கல்லுத் தெப்பமாகி, அவரை அக்கரையிலுள்ள திருப்பாதிருப்புலியூர் என்னுந் தலத்திற் கொண்டு சேர்த்தது.

இத்தனை கொடுமைகளுக்கும் ஈடுகொடுத்து இறவாதிருந்த நாவுக்கரசரின் சிவனருட்டிறங்கண்டு, அரசன் அவரை மன்னித்து விட்டதுமன்றிச் சைவ சமயத்தில் தானுஞ் சேர்ந்துகொண்டான்.

இவ்வாறு சைவங்காத்த திலகவதியார் பெண்களுலகத்துக்கும் சைவ உலகத்துக்கும் பெருமை சேர்ப்பவராக என்றும் புகழுடம்போடு வாழ்கிறார்.

முற்றிற்று

★ பண்பு அமைவது ஒருவருடைய இளமையில். ★

ௐ

## உலகம் உய்ய

# ஒரு திருமுருகன் உதித்தனன்

சிவ. சண்முகவடிவேல்

சிவபிரானுடைய சரணகமலாயத்தைப்பணிந்த உறுதியோடு வாயுதேவன் வெளியே வந்தான். மிகுதியான காவலை உடைய திருக்கோவிலினை நீங்கினான். சுவாலை மிக்க அக்கினிப்பொறிகளைச் சிரமேற் தாங்கினான். அதனைப் பிரமதேவர் முதலாயினவர்கள் கண்டார்கள் கருதரும் களிப்புக்கடலில் குளித்தார்கள். வாய் விண்டார்கள்.

''செம்மேனி அம்மானார் சிறியேங்களுக்குத் திருவருள் செய்தார். நாம் உய்யநல்லருள் நல்கினார். முற்காலத்தில் தோற்றிய வீரபத்திரக் கடவுளைப் போன்ற குமாரனைத் தந்துள்ளார். நெற்றிக் கண்ணினின்றும் உதவினார். கற்றையங் கதிர் போல் தோற்றுவித்தார்.

''சிறியேங்கள் தொன்னிலை பெறவேண்டும். சூரன்நன்னிலை பாறவேண்டும். அதற்கு இன்னும் சிலகாலங்கழிய வேண்டும். அதனால் தமக்கு ஒப்பான தனயனை சரவணத்தில் குழந்தையாக வளர வைத்தார்.

''அப்பணி சடையோன் முப்புரம் எரித்தவன். அவன் செயல் யாவும் அருள் திறமேயாம். தக்கசான்று இது. அக்கினிப் பொறியைத் தோற்றுவித்தது. அது சொலற்கரிய கருணையில் தலைமையானது,

இன்னும் பலபல இவ்வாறு பகர்ந்தார்கள். இனி மாயத்தில் வல்லஅவுணர்கள் மாய்வார்கள். வருந்தும் நம்குறை நன்றே நீங்கியது. நாமும் சரவண தடாகம் செல்வோம் என்று செப்பினார்கள்.

வாயுதேவன் முன்னே சென்றான். வெப்பம் மிக்கசுடர்கள் ஒளிகான்றன. திருமகள் மார்புடைச் செம்மல்பின்னே சென்றான். ஏனைய தேவர்கள் உடன் வந்தார்கள். யாவரும் திருக்கைலாச மலையை அகன்று சென்றார்கள்.

கணப்பொழுது கழிந்தது. வாயுதேவன் வருந்தினான். தீச்சுடர் தாங்க ஆற்றாதவனானான். பாலசந்திரனைத் தரித்த பகவான் ஆனையை எண்ணி

★ மனதில் மாறுதல் உண்டானால் அது உடலிலும் உண்டாகிறது. ★

னான். வலிமைமிக்கவன் அக்கினி தேவன் அவன் சென்னியில் சேர்த்தினான்.

அக்கினிதேவன் உடலம் வியர்த்தான். மனம் புழுங்கி னான். ஒரு நாழிகை வருத்தத் தோடு சுமந்தான். கால் கடுத் தது. கலங்கினான் கனற்கடவுள். விரைந்துஏகினான் கனற்பொறி களைக் கங்கையில் கலக்க விட்டான்.

அக்கினி தேவன் ஒளிமய மானவன். அக்கினிப் பொறிக ளும் ஒளிமயமானது. ஆறு அக் கினிப் பொறிகளையும் ஆற்றில் உய்த்தலும் கங்கைநீர் கரந்தது. கங்கை, பண்ணவனுடைய பவள வார் சடையில் கரந்த கங்கை போலாயிற்று.

கங்காளர் கருணையைக் கங்கா நதி கருத்திற் கொண்டாள் அக்கினிச் சுடர்களைத் தனது சிரமேல் தாங்கினாள். இமைப் பொழுதில் இமயம் சார்ந்த சர வணத்தில் சேர்த்தாள். தாமரை மலர் இதழ்கள் செறிவனபோலச் சரவணத்தில் சுடர்கள் தோற் றின.

அரி பிர மேந்திராதியர்களும் சரவணத்தை வந்து சார்ந்தார் கள் பார்த்துப் பரவசமடைந் தார்கள். உள்ளத்தில் உவகை பூத்தார்கள்.

பேராசையுடையவறிஞர் வயல் விளைவை எதிர் நோக்கு வான். காவல் கொள்வான். அது போலத் தேவர்கள் சரவண தடாகத்தைச் சூழ்ந்தார்கள். காவல் கொண்டார்கள்.

பிரமதேவர் ஆகாயத்தைக் காவல் செய்தார். திருமால் பூமி யைக் காவல் காத்தார். இந்தி ரன் முதல் அட்டபாலகர்கள் எட்டுத் திக்கிலுமாகக் காவல் பூண்டார்கள்.

இமைய மலைச்சாரலில் உள் ளது சரவணப்பொய்கை, தெய் வீகத் தன்மை வாய்ந்த சுடர்கள் ஆறும் கங்கையும் வற்ற வந்தன முன்னர்ப் பார்ப்பதி அம்மை யார் வாழ்ந்த தடாகத்தில் சேர்ந்தன. முக்கண் பெருமான் அருள் முறையால் கங்கை நதி முன் போலப் பாய்ந்தது.

ஆகாயத்திலிருந்தும் உதிப் பது வாயு. வாயுவினின்றும் தோற்றுவது அக்கினி. அக் கினியில் உற்பவிப்பது நீர். அத் தத்துவ முறைக்கு மாறுபட்ட செயலாக இது நிகழ்வது; சிவந்த அக்கினி இரக்கத்துடன் தோற்று வித்துச் சுமந்து கொள்கின்றது சரவண தடாகம் சிவபிரானது நெற்றிக் கண்களினின்றும் தோன் றிய அக்கினியைத் தாங்கும் தன்மை.

சிவபிரான் மெய்ஞ்ஞானி களுக்கு அருவம் ஆவார். அல் லாதவர்களுக்கு மூலமாவார்.

★ வீட்டிற்கு அலங்காரத்தைவிட அத்திவாரமே முக்கியமானது. ★

முதலாவார், உருவத்திருமேனி உடையாராகுவர். ஏகனாக உள்ளார். அநேகனுமாவார். தந்தையாரொடு தாயிலர். அனைத்து ஆன்மாக்களுக்கும் தந்தையோடு தாயுமாவார் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுப்பார். விருத்த பாலகுமாரனுமாவார். விச்சதின்றி விளைவு செய்குவார். அனைத்துத் தத்துவங்களின் தோற்றத்திற்கும் மூலமாவார். பிரமமும் ஆகுவார். செம்பொற் சோதியாவார்; ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியுமாவார். கற்பனை கடந்த சோதியுமாவார். சோதியாகவும் சுடராகவும் சூளொளி விளக்குமாவார். 'ஓஅற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளியுமாவார். சரவண தடாகத்தில் அக்கினித் தழல் பிழம்பும் ஆவார். அச்சோதிப் பிழம்பு ஓர் திருமேனி ஆனது. கருணை கூர் முகங்கள் ஆறு ஆனது. கரங்கள் பன்னிரண்டு கொண்டது உலகம் உய்ய உதித்தது. சரவண தடாகத்தில் தவழ்ந்தது. தன்னிணை தானே ஆன குமாரனாகக் குளத்தில் குதித்தது.

ஒரு திரு முருகன் ஆங்கு உதித்தனன். உலகம் உய்ந்தது. துந்துபி வாத்தியங்கள் துவைத்தன. சிறந்த வேதங்கள் சிலிர்த்தன. மலர்மகன் மலர் சொரிந்தார். திருமால் பிரசமலர் பொழிந்தார். இந்திரன் நறுமலர் இட்டான் முனிவர்கள் பூமழை தூவினார்கள். எல்லோருமாகச் சரவணத்தைச் சூழ்ந்து வந்தார்கள் எம்மைஎன்றுகொள் என்று ஏத்தினார்கள்.

சிவபிரானிடத்து அமைந்த குணங்கள் ஆறு. அவை - முற்றறிவு, வரம்பிலின்பம், இயற்கை அறிவு, தன்வயம், குறைவிலாற்றல், வரம்பிலாற்றல், வடமொழியில் அவற்றைப் பின்வருமாறு வழங்குவர். சர்வஞ்ஞதை, திருப்தி, அனாதிபோதம், சுவதந்திரம், அலுப்தசக்தி, அனந்த சக்தி.

ஆறுகுணங்கள் சேய்க்கு ஆறு முகங்கள் போலானது. மலர்கள் பொருந்திய குளிர்ந்த சரவணத்தில் வீற்றிருந்தார். ஆன்மாக்களைக் காத்து அருளக் குமாரக் கடவுள் ஆறுதிருமுகங் கொண்டு அவதரித்தார்.

அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய.

★ ஒழுக்கமும் உயர்குணமும் உடையார்க்கு பிறயாவும் உண்டு. ★

உ

# முருகனையே முழுமுதற் கடவுளாய்ப் போற்றி மகிழ்ந்து அவனருள் பெற்ற திருத்தொண்டர்கள்

தி. மயூரகிரி

### (1) குமரகுருபர சுவாமிகள்

பிறவிஊமையாய் 5வயது வரையிலிருந்து செந்தில்வேலவன் அருளால் ஊமை நீக்கிப் பின் ''குட்டிக் கந்தபுராணம்'' எனப் படும் ''கந்தர்கலிவெண்பா'' பாடியதுடன் குமரனருளால் புலியை வாகனமாய்க் கொண்டுவாழ்ந்த மாபெரும் ஞானி.

### (2) தேவராய சுவாமிகள்

கல்வி, செல்வம், வீரம் மூன்றும் தாராளமாக இருந்தும் ஓர் ''வயிற்றுவலி''யால் பலவருஷம் அவஸ்தையுற்று வைத்தியர்கள் யாவராலும் கைவிடப்பெற்று வைத்தியநாதனாம் செந்திவாதிபனை துதித்து ''கந்தசஷ்டிகவசம்'' பாடி நோய் நீங்கப்பெற்று முருகன் திருவடிசேர்ந்த பெருந்தகை.

### (3) வென்றிமாலை கவிராயர் சுவாமிகள்

கல்வியறிவு சிறிதும் இல்லாதிருந்து குமரனருளால் யாவும் பெற்று ''செந்திற் புராணம்'' பாடி செந்தில்வேலனால் வாழ்த்தப்பட்டதுடன் ''வென்றி மாலைக்கவிராயர்'' எனப்பட்டமும் பெற்றஞானி.

### (4) கச்சியப்ப சுவாமிகள்

எம்பெருமானாகிய முருகவேளே வந்து அங்கீகரித்து கையொப் பம் இடும்படியாக கந்தபுராணம் இயற்றியதுடன் எம்பெருமானின் தரிசனமும்பெற்று கந்தன் வரலாற்றை யாரும் தெரிந்துகொள்ளச் செய்த பெருமானாகிய இவர் குமரகோட்ட அர்ச்சகராவார்.

### (5) நக்கீர சுவாமிகள்

சிவபூஜையினின்று தவறி பூதம் கையில் அகப்பட்ட இவர் ''திருமுருகாற்றுப்படை''யை முருகன் மேற்பாட குமரனார் தன் கரத்தில்உள்ள ''வேலை'' விடுத்து பாவமேஉருவான அந்தப்பூதத்தை சங்கரித்து நக்கீரரைக் காத்ததுடன் ''திருக்கைலாய'' காட்சியும் காண்பித்தார் இவர் பின் முத்திபெற்றார்.

★ பொறுமையாய் இருத்தல் நல்ல அணிகலன். ★

## (6) பகழிக் கூத்தர் சுவாமிகள்

சுத்தவைணவர் ஆகிய இவருக்கு ஏற்பட்ட நோயால் வருந்தி செந்தூரனைப் போற்றி ''செந்தில் பிள்ளைத்தமிழ்'' பாடிட செந்திலாதிபன் இவரைப் போற்றி ''முத்துமாலை'' அணிவித்ததுடன் இவருடைய நோயையும் நீக்கி சைவவைஷ்ணவ சமரசம் செய்தருளினார்.

## (7) அருணகிரிநாத சுவாமிகள்

முருகவழிபாட்டிலே ஈடுபடும் யாவர்க்கும் தெரிந்தவர். தேனினும் இனிய ''திருப்புகழ்'' மற்றும் வேறுபலவற்றையும் அருளிச் செய்தவர். குமரனே குருவாய் வந்து அருளிச் செய்யப்பெற்றவர் அருணகிரியிற் பிறந்த இவர் பாதங்களைப் பணிவோமாக.

## (8) வள்ளலார் சுவாமிகள்

ஒளி வடிவாயிருக்கும் குமரனைப் போற்றி 'கந்தகோட்டப்பதிகம்' பாடியதுடன் முகம்பார்க்கும் கண்ணாடியில் வேலவனைத் தரிசித்த இவரை நாம் ''இராமலிங்கம் வள்ளலார் போற்றி'' என வணங்குவோமாக.

## (9) பொய்யாமொழிப் புலவர் ஸ்வாமிகள்

முருகனை ஏழனம் செய்து வந்த இவருக்கு முருகன் வேடவடிவு தாங்கிவந்து அருள்சுரந்தார். அதனால் மகிழ்ந்த இவர் குமரக் கடவுளை பல பாடல்களால் துதித்து சாயுச்சிய முத்திபெற்றார்.

## (10) பெருந்தேவனார் சுவாமிகள்

தேவாதி தேவனாம் வேற்பெருமானை பாடிப்பரவி வந்தபொய்யடிமையில்லாப் புலவராம். இவர் பாரதம் பாடியபோதும் கடவுள் வாழ்த்தாக வேலவனையே பாடினார். இவரைப் பாடி மகிழ்வோமாக.

## (11) ஔவைப் பிராட்டி

இவருடைய பெயருடையவர்கள் பலர் என கூறப்படுதலால் இவருடைய ஒழுங்கான வரலாறு இன்னமும் புலப்படவில்லை. ஏஃதாயினும் முருகக்கடவுள் மாறுவேடம் பூண்டுவந்து இவருக்கு அருள் செய்து தன்னைப் பாடவைத்தான் என்ற வரலாறு பிரசித்தம் இவரைப் போற்றி வழிபடுவோமாக.

★ இன்று நாம்செய்யும் நன்மையே நாளைய இன்பம். ★

**(12) பாம்பன் ஸ்வாமிகள்**

முருகனை ஞானகுருவாகக்கண்டு அவனால் உபதேசம்பெற்று சண்முக கவசம், குமாரஸ்தவம், சண்முகநாமாவளி' முதலியனபாடியவர். இவர் அடியார்கள் இன்று பாரதநாட்டில் ஏராளம்.

**(13) தண்டபாணி ஸ்வாமிகள்**

கௌபீன தாரியாய் முருகக்கடவுளை "குழந்தை" யாக எண்ணி அவனோடு சிரித்தும், கதைத்தும் மகிழ்ந்ததுடன் அவனைப் பாடிப் பரவி வழிபட்டவர். கௌமாரமட ஸ்தாபகர் இவராவார்.

## ஞானச் சுடரினை நல்கு

நோயென்று பாயிற் கிடந்துநான் மற்றவர்
சீயென்று மிக்கச் சிணுங்காமல் - போயுந்தன்
மீயுயர் நோன்தாள் மறவாது வாழ்தற்கு
நாயென்னை நீ பணிப்பாய் நன்கு.

மண்வேண்டும் பொன்வேண்டும் மிக்கநல்ல பெண்வேண்டும்
என்றென்தன் நெஞ்சமோ இவ்வுலகில் - கண்கெட்டு
தன்னிலை யென்னா தலைவதை யோராயோ
சந்நிதிவா மும்சண் முகா.

எந்நிலை யானுறினும் உன்னை மறவாத
சிந்தை யுடனிருக் கின்றநிலை - எந்தைநீ
தந்திடல் வேண்டுமையா ஈஃதன்றி வேண்டாவே
இந்தப் பிறப்பில் வே(று) றின்பு.

சொந்தமெல்லாம் சொத்தென்றால் சுற்றிநின்று வாய்பிளக்கும்
எந்தனுயிர் போகையிலே யார்வருவார் - இந்த
உறவையுண் மையென்று நானிருக்க லாமோ
பறந்துநீவா ராய்யென் அருகு.

மானிடத்திற் தோன்றியென் மாழும்கா லம்வரையிக்
கானல்வாழ் வைநிசம் என்றபடி - நானிருப்ப
தோவென்தன் தோகை மயில்வா கனாவந்து
தீரென்தன் இக்கொடிய துன்பு.

கோலமென்றால் உன்மேனிக் கோலமே கோலமையா
ஞாலத்தில் வாழும் ஞமலிநான் - காலபயம்
போனவுயர் மோனநிலை யெய்துதற்கு உன்தனது
ஞானச் சுடரினை நல்கு.

**நா. நவராஜ்**

பேச்சைவிட மௌனமே சிறந்தது.

# மானுடத்தை மேன்மைப்படுத்தும் மாண்புமிகு கோட்பாடுகள்

( மகாபாரதத்திலிருந்து )

# இரண்டாம் நாட்போர்

சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

இரண்டாம் நாள் திட்டத்துய்மன் கிரௌஞ்ச வியூகத்தை அமைத்துப் படைகளை நகர்த்தினான். பீஷ்மரும் கௌரவ சேனையை அணி வகுத்துக் களத்தில் நிறுத்தினார். முதல் நாட் போரின் வெற்றியினால்க் கௌரவ சேனை ஆர்ப்பரித்து நின்றது. துரியோதனன் மேன் மேலும் தனது படைகளினூடு சென்று அவர்களை உற்சாகப் படுத்தினான். இரு தரப்பினருக்கும் யுத்தம் கடுமையாகத் தொடங்கியது. பீஷ்மரின் தாக்குதலினால் பாண்டவ சேனையை வழி நடாத்திய திட்டத்துய்மன் வகுத்த கிரௌஞ்ச வியூகம் உடைந்து போயிற்று அதனால்ப் பாண்டவசேனை பெரும் பாதிப்பைச் சந்தித்தது. தமது படைகள் பெருமளவு அழிவதனைக் கண்ட அர்ச்சுனன் அதிக ஆத்திரம் அடைந்தவனாய்ப் பீஷ்மரின் இடத்துக்குத் தனது தேரைச் செலுத்துமாறு கண்ணபிரானிடம் வேண்டிக் கொண்டான். அர்ச்சுனனது தேர் பீஷ்மர் இருக்கும் இடத்தை அடைந்தது. அர்ச்சுனன் கௌரவ சேனையூடு புகுந்து அதிதீரத்துடன் போர் புரிந்தான்.

கௌரவ சேனைகளின் நடுவே சுழல்காற்று புகுந்தது போன்று சுற்றிச் சுழன்று அனைத்துத் தரப்பினரையும் தாக்கினான். மன்னர்களை சிரச்சேதம் செய்தான். யானைகள் குதிரைகளைத் துவம்சம் செய்தான். காலாட் படைகளைக் கதி கலங்க அடித்தான். அர்ச்சுனனின் போராற்றலைக் கண்ட துரியோதனன் நம்பிக்கை குன்றிப் பீஷ்மரை அணுகி " கங்கையின் புதல்வநீர் இருக்கும் போதே எமது படைகட்கு நேர்ற கதியைப் பாரும். உங்கள் மீது உள்ள பகமையினால்க் கர்னனும் போரிலிருந்து ஒதுங்கி இருக்கிறான். எனவே தாங்கள் அர்ச்சுனனை வதம் செய்ய முயல வேண்டும் " எனக் கேட்டுக் கொண்டான். துரியோதனனின் இக்கூற்று பீஷ்மரைப் புண்படுத்தியது.

மன வேதனையுடன் போரில்த் தீவிரமாக ஈடுபடலா

னார். அர்ச்சுனனை ஆக்ரோஷத்துடன் எதிர்த்தார் பீஷ்மர். அர்ச்சுனனும் சளைக்காது பீஷ்மருடன் சமமதையாகப் போர் புரியலானான். பீஷ்மர் அடித்த பாணமொன்று கண்ணபிரானைக் காயப்படுத்தியது. இதனால் அர்ச்சுனன் மிகவும் கோபமடைந்தான். அர்ச்சுனனும் பீஷ்மரின் சாரதியைத் தாக்கிக் கொன்றான். அர்ச்சுனன் மேலும் மேலும் விடாது பீஷ்மரைத் தாக்கிக் கொண்டேயிருந்தான்.

மற்றொரு புறத்தில் திட்டத்துய்மன் துரோணரை எதிர்த்துக் கடும் தாக்குதலில் ஈடுபட்டான். திட்டத்துய்மன் துரோணருடன் திறமையாகப் போர் புரிவதனைக் கண்ட யுதிஷ்டிரர் அவனை வெகுவாகப் பாராட்டினான். உற்சாகமாகப் போரிட்ட திட்டத்துய்மன் நேரம் செல்லச் சோர்வடைந்தான். திட்டத்துய்மன் களைப்புற்றதனைக் கவனித்த பீமன் உடனே அவ்விடத்துக்கு விரைந்தான். பீமன் துரோணர் மீது பல பாணங்களைத் தொடுத்துத் திட்டத்துய்மனைத் தனது தேரில் ஏற்றிப்பாதுகாத்து மேலும் போரிட்டான். பீமனின் தாக்குதலைக் கண்ணுற்ற துரியோதனன் துரோணருக்கு உதவும் பொருட்டுப் பெரும் படையொன்றை அனுப்பி வைத்தான். கலிங்க நாட்டுப் படையாகிய அப்படைகள் வெறிகொண்டு மிகவும் உத்வேகத்துடன் தாக்கத் தொடங்கியது. பீமன் கலிங்கப் படையின் வேகத்தைக் கண்டவனாய்த் தேரிலிருந்தவாறே பல திசைகளையும் நோக்கிப் பாணங்களைத் தொடுத்தான். பீமனின் வீரமிகு தாக்குதலினால்க் கலிங்கப் படை சின்னா பின்னமாகியது.

பீமனின் கையிலகப்பட்ட கௌரவ சேனை அலறுவதனைக் கண்ட பீஷ்மர் பீமனின் முன் தனது தேரைச்செலுத்தி அவனுடன் போரிடலானார். கௌரவ சேனையின் அவல நிலை கண்ட பீஷ்மர் பீமனின் தேர்க்குதிரைகளைக் கொன்றார். உடனே பீமன் தேரினின்று இறங்கிக் கதாயுதத்தைக் கையில் எடுத்து மோதத் தொடங்கினான். பீமனின் குதிரைகளை பீஷ்மர் அழித்தமையைக் கண்ணுற்ற சாத்யகி பாணங்களைத் தொடுத்து பீஷ்மரின் தேர்ப் பாகனைக் கொன்றான். சாரதி அற்ற தேரை குதிரைகள் தம் பாட்டில் இழுத்துக்கொண்டோடின. அர்ச்சுனனின் ஆற்றலையும் பாண்டவ சேனையின் தீரத்தையும் கண்டு கொண்ட பீஷ்மர் துரோணரிடம் ''நமது படைகள் நன்றாகக் களைத்துப் போய் விட்டன. அர்ச்சுனனின் ஆற்றலைப் பார்க்கும் போது அவனை வெல்வது கடினமாக உள்ளது. எனவே இத்துடன் போரை இன்று நிறுத்துவோம்'' என்று உரைத்து அன்றைய போரை நிறுத்திக்கொண்டார். இரண்

டாம் நாட்போரில் பாண்டவ சேனையின் பக்கம் வெற்றி இருந்தமையால்ப் பாண்டவர் படைகள் ஆரவாரத்துடன் பாசறையை நோக்கிச்சென்றன.

### 3-ம் நாட் போர்:-

மூன்றாம் நாள் அதிகாலை யிலேயே பீஷ்மர் தமது படைகளை கருடவியூகமாக வகுத்து நிறுத்தினார். முதல்நாட்போரில் ஏற்பட்ட அழிவுகள் இன்று தவிர்க்கப்பட வேண்டும் என்ற தீவிர முனைப்பு அவர் உள்ளத்தில்இருந்தமையால்மிகவும் துரிதமாகச்செயல்ப்படலானார். கருட வியூகத்தின் முன் அணியில் துரோணர், அசுவத்தாமன், கிருதவர்மா முதலியோரும் பின் அணியில்த் துரியோதனனும் இருந்தனர். பாண்டவர்கள் தம் சேனைகளைப் பிறைச்சந்திர வியூகத்தில் வகுத்துக் கொண்டனர். இடதுமுனையில் அர்ச்சுனனும் வலது முனையில் பீமனும் நின்றனர். யுத்தம் ஆரம்பமாகியது. கௌரவ சேனைகள் அர்ச்சுனனைத் தாக்குவதில் மும்முரமாக ஈடுபட்டது. அர்ச்சுனனே அவர்களது குறியாக விளங்கினான். சகுனி தனது படைகளை ஏவி அபிமன்யுவைத் தாக்கினான். அபிமன்யுவிற்கு உதவியாகச் சாத்யகி வந்து சேர்ந்து கொண்டான். சகுனியின் தீவிரத் தாக்குதலால் அபிமன்யுவின் தேர் உடைந்தது. சாத்யகியின் தேரில் ஏறிக் கொண்ட அபிமன்யும் சாத்யகியும் தீவிரமாகச் சகுனியின் படைகளை அழிக்கத் தொடங்கினர்.

மற்றொரு புறத்தில் பீமன் தனது புதல்வன் கடோத்கஜனுடன் சேர்ந்து துரியோதனனைத் தேடித் தாக்கத் தொடங்கினான் பீமனின் தாக்குதலினால் துரியோதனன் மூர்ச்சை அடைந்தான். இதனைக் கவனித்த கௌரவசேனை சிதறுண்டு ஓடத் தொடங்கியது. பெரும் சிரமத்துடன் கௌரவ சேனையை பீஷ்மர் நிலைப்படுத்திய வேளை துரியோதனன் மூர்ச்சை தெளிந்து எழுந்து பீஷ்மரை நோக்கி ''பிதாமகரே நீர் பாண்டவர்களை எதிர்க்கும் விருப்பம் அற்றவராய்ப் போர் புரிகிறீர். இதனை முன்பே தெரிவித்திருந்தால் நான் கர்னனைச் சேனாதிபதியாக்கி பாண்டவர்களை அழித்திருப்பேன்'' என்று பீஷ்மரின் உள்ளம் வேதனையடையக் கூடிய வகையிற் பேசலானான். இவ்வுரைகளைச் செவிமடுத்த பீஷ்மர் உரக்கச் சிரித்தவராய் ''துரியோதனா! நான் முன்பே பல தடவைகள் உனக்கு எடுத்துரைத்துள்ளேன். பாண்டவர்களைத் தேவர்களாலும் கூட வெல்ல முடியாது. நான் கூறிய அறிவுரைகளை நீ ஏற்கவில்லை. போரைத் தொடங்கி விட்டு வீணேஎன்மீது பழிசுமத்துகிறாய்'' என்றுகூறி மீண்டும் போர் செய்யலானார்.

பண்புக்கு பெரும் பகை செல்வம்.

ஆக்ரோஷத்துடன் பீஷ்மர் தாக்கத் தொடங்கினார். பீஷ்மரை வலுவாக எதிர்க்க விருப்பமில்லாத நிலையில் அர்ச்சுனன் போர் புரிந்துகொண்டிருந்தான். இதனால்ப் பாண்டவ சேனைகள் அழிவைச் சந்தித்தது. இதனை நன்குணர்ந்த கண்ணபிரான், பீஷ்மரை தாக்கும் பொருட்டு தமது சக்கராயுதத்தை வரவழைத்துத் தமது கரங்களில் தாங்கியவராய்ப் பீஷ்மரை நோக்கிச் செல்லலானார் பீஷ்மர் இதனைக் கவனித்ததும் கண்ணபிரானின் கைகளினால் தாம் மரணிப்பதனை விரும்பியவராய்ப் போர்புரியத் தொடங்கினார். கண்ணபிரான் சக்கராயுதத்துடன் தேரில் இருந்து செல்வதனைக் கண்ட அர்ச்சுனன் அவரது பாதங்களில் வீழ்ந்து அவர் செய்து கொண்ட சத்தியத்தை நினைவுபடுத்தி ''நான் எனது சபதத்தை முடிப்பேன், தாங்கள் போரிடக் கூடாது'' என்று அவரைத் தடுத்து நிறுத்தினான். பின்னர் மிகவும் உத்வேகத்துடன் போரிடலானான். அர்ச்சுனன் தீவிரமாகப் போரிட்டமையால்க் கௌரவ சேனைகள் பெரும் பாதிப்படைந்தது அர்ச்சுனனுக்கும் பீஷ்மருக்குமிடையில் உக்கிரமான யுத்தம் நடந்தது. அர்ச்சுனன் மிகவும் கோபமடைந்தவனாய்ப் பெரும் சக்தி வாய்ந்த ஆயுதமொன்றைக் கௌரவ சேனையின்மீது ஏவலானான். கௌரவ சேனை நிலைகுலைந்து ஓடத்தொடங்கின. மாலைக் காலமும் வந்தமையால் பீஷ்மர் அத்துடன் போரை நிறுத்தினார் மூன்றாம் நாட்போரிலும் பாண்டவசேனைகள் களிப்புடன் பாசறை திரும்பின.

(தொடரும்...

## சுவாமி விவேகானந்தரின் பார்வையில்

தனக்கென்று உணவு சமைப்பது சுயநலம் என்று நினைக்கிறான் இந்து; ஆகவே அவன் ஏழைகளுக்காகச் சமைக்கிறான்.

அனைவருக்கும் சேவகனாக இருப்பதன் வாயிலாகத்தான் இந்துக்கள் ஏழை, எளியோரின் வாழ்க்கையை உயர்த்த முற்பட வேண்டுமேயன்றி வெளிநாட்டிலிருந்து ஏதேனும் உதவிகிடைக்கும் என்று எதிர்நோக்கிக் கொண்டிருப்பதால் அல்ல.

வெறும் பேச்சோடு நிற்காமல் செயலில் இந்துக்கள் ஈடுபட வேண்டும். அது முடியாவிட்டால் எதைப் பெறவும் 'அவர்களுக்குத் தகுதியில்லை.

★ வாழ் நாட்களின் இனிய பருவம் இளமை. ★

உ

# சைவசித்தாந்த நோக்கில் கந்தன் வழிபாடும் காவடியாட்டமும்

## திருமதி ஞானசக்தி கணேசநாதன்

சங்ககாலத்தில் 'முருகன்' என்ற பெயரில் வணங்கப் பெற்ற கடவுளையே தேவார காலம் தொடக்கம் 'கந்தன்' என்ற நாமத்திலும் மக்கள் வழிபட்டனர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் தேவாரத்திலேயே கந்தன் என்ற பெயரைக் கண்டு கொள்ள முடிகிறது 'பெற்று உகந்து கந்தனையே' என்பது திருஞானசம்பந்தரின் தேவாரம் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் 'கந்து' என்ற சொல்லடியிலேயே கந்தன் என்ற சொல் தோன்றியிருக்கலாம் என அறிஞர் கூறுவர். தொல்காப்பியம் குறிப்பிடும் 'கொடிநிலை கந்தழி வள்ளி' என்ற சொற்றொடரில் வரும். கந்தழி என்பது பற்றுக் கேடில்லாதது என்று பல பொருள்கூறினும் அது கந்தன் என்ற சொல்லையே சுட்டி நிற்கின்றது. அந்த வகையில் கந்தனை வந்தனை செய்யும் அடிப்படையில் தோன்றிய ஒரு சமயவழிபாட்டுமுறையே காவடியாட்டமாகும். இவ்வாறு தனித்துவம் பெற்று விளங்கும் காவடியாட்டத்திற்கு ஒரு சமயப் பின்னணி மட்டுமன்றித் தத்துவ விளக்கமும் உண்டு.

காவடியிலும் காவடியாட்டக்காரரின் கைகளிலுங் காணப்படும் வேலானது ஆழ்ந்து அகன்று நுண்ணியனாக விளங்கும் சைவசித்தாந்தக் கடவுட் கொள்கையினைச் சுட்டி நிற்கின்றது. கடவுளை எப்பொழுதும் பற்றிப்பிடிக்க வேண்டும் என்ற பேருண்மையினையும் கையிற் காணப்படும் வேல் உணர்த்துகின்றது ஆணவ முனைப்புடைய அவுணர்களை அழித்து விண்ணோர் சிறை மீட்ட திருக்கை வேலின் குறியீடாகவே காவடியாட்டக்காரரின் கைவேல் விளங்குகின்றது தீயவர்களை அழித்து நல்லோரைக் காப்பாற்றும் கடவுள்தத்துவத்தைக்காவடி·வேல்காட்டி நிற்கின்றது காவடியில் காணப்படும் மயிலின்தோகையானது பிரணவமாகிய ஓங்காரம் குறிக்கும் உயர் தத்துவத்தைக் குறித்து நிற்கின்றது காவடியில் கட்டப்பட்டிருக்கும் மயில் இறக்கைகள் ஆணவம் அழியாது வலிகுன்றி மலபரிபாகப்பட்டிருக்கும் என்ற

சைவசித்தாந்த ஆணவக்கொள்கையினையும் சுட்டி நிற்கின்றது இது பற்றி பின்வருமாறு நோக்கப்பாலது.

காவடியில் மயில் இறக்கையானது சூரபன்மனின் ஆணவம் அடங்கி அவன் மயிலானதை உணர்த்தும் என்பர். ஒரு சாரார் பக்தன் ஒருவன் ஒரு ஆண்டில் ஒரு முறை தன் ஆணவத்தை அடக்கி முருகன் முன்னிலையிற் காவடியுடன் திருவடியில் வந்து தன்னை ஒப்புவிப்பதாகவும் அத்துடன் வேலைப்பாச்சி முள்ளு மிதிதடியில் நடந்து வருவர். அப்பனே! உன்னால் உண்டாக்கப்படுவது இந்த உடல் அதனை உன்பெயரைச் சொல்லி வருத்தி உன்னை நினைத்து உருகி ஆடிப்பாடி வருகின்றேன் என நினைக்கின்றான் இதுவேசெடிற் காவடியின் மெய்ப்பொருள் ஆகவே சைவசித்தாந்தம் கூறும் ஆணவம் கன்மம் என்ற கோட்பாடுகளை விளக்கும் வழிபாட்டு முறையாகக் காவடியாட்டம் நிகழ்த்தப்படுகின்றது காவடி எடுப்பவர் சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவை சுட்டி நிற்கின்றார் எனலாம். இவ்வான்மாவானது ஆணவம் கன்மம் முதலான பாசங்களை விட்டு நீங்கி ஆன்மீக விடுதலையினை அவாவி நிற்றலே காவடியாட்டத்தின் உட்பொருளாகும் கடினமான தூக்குக்காவடி பத்மாசன காவடி வழிபாட்டு முறைகளை நிகழ்த்துகின்றவர்களின் வாழ்க்கையினை நோக்குகின்றபோது ''அவரவர் செய்ததை அவரவரே அனுபவிப்பர்'' என்ற சைவசித்தாந்த கன்மக்கொள்கையின் ஓர் உண்மை தெளிவாகின்றது இவ்வாறாக காவடியிலும் காவடி வழிபாட்டு முறையிலும் சைவக்கொள்கையும் சைவசித்தாந்தம் தந்த மெய்யியல் அடிப்படைகளும் நன்கு எதிரொலிப்பதைக் கண்டு கொள்ளமுடிகிறது.

## ஈழத்திற் காவடியாட்டம்

கந்தவனக்கடவை முதற் கதிர்காமம் வரையிலும் காவடியாட்டத்தின்மூலமாகக் கந்தனை வழிபடும் மரபு காணப்படுகின்றது. அன்னதானக் கந்தன் என்று அன்புடன் அழைக்கப்படும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் நிகழும் திருவிழாக் காலங்களில் தூக்குக் காவடி, துலாக்காவடி முள்ளு மிதிக் காவடி பறவைக்காவடி, எனப் பலவகையான, காவடிகளை எடுத்து கந்தனுக்குக் காணிக்கை செலுத்துவர் இதனால் சந்நிதிக் கந்தனை காவடிக்கந்தனாகவும் விளங்கும் மாட்சி குறிப்பிடற்பாலதாகும்.

கதிர்காமக்கந்தன் ஆடிமாத திருவிழா நாட்களில் வேலவனின் வீதியெங்கும் வேற்காவடி, செடிக்காவடி, அன்னக்காவடி

முதலான காவடிகளை எடுத்து வந்தனை செய்வதைக் காண முடிகின்றது.

நல்லூர்க்கந்தன் ஆலயத்தில் ஆவணிமாதத்தில் வரும் தேர், தீர்த்தத் திருவிழாத்தினங்களில் வேலவனின் வீதிகளில் பாற் காவடி, பறவைக்காவடி, சர்க் கரைக்காவடி என்பன எடுத்து கந்தனை வழிபடுகின்றனர்.

இவ்வாறு திருகோணமலை. மட்டக்களப்பு ஆகிய மாவட்டங் களில் காணப்படும் கந்தன் கோயில்களிலும் காவடி வழி பாட்டுமுறை காணப்படுகின்றது.

ஈழத்தில் உள்ள முருகன் ஆலயங்களில் மட்டுமன்றி சிவன்கோயில்கள் சக்தி ஆலயங் கள் போன்றவற்றிலும் காவடி யாட்டம் சிறப்பாக நடைபெறு வது குறிப்பிடற்பாலதாகும்.

பக்தியுடன் ஆரம்பித்த காவடியாட்டம் மன வைராக் கியம் உள்ளவர்களும் காவடியா டலாம் என்ற நிலையில் விளங்கு கின்றது. ஆறுமுகனின் அருள் கடாட்சம் வேண்டி நிகழ்ந்த காவடியாட்டம் அவைக்காற்றுக் கலையாக அரங்குகளில் ஆடப் படுவதும் குறிப்பிடத்தக்கதாகும் கந்தக்கடவுளின் வழிபாட்டு முறையின் தோற்றம் பெற்ற காவடியாட்டம் கிராமிய நடனம் எனக்கூறும் கலைமரபு பெற்றுச் சிறப்புடன் திகழ்கின்றது.

## சந்நிதிக்கு அடிமையாகினேன்

ஏழையாக வணங்கும் போதும்
இறங்கி வருகின்றாய்
ஏற்றமாக வணங்கும் போதும்
ஏறிவருகின்றாய்
கூழைவைத்து வணங்கும்போதும்
குடிக்கவருகின்றாய்
கூவியுன்னை வணங்கும் போதும்
குளிரச்செய்கின்றாய்
வாழவழி கேட்டபோதும்
வயிற்றை நிரப்புகிறாய்
வலியவரைக் கண்டபோதும்
வேலைத் தருகின்றாய்
ஆழக்கடலில் போகும் போதும்
அஞ்சேல் என்கிறாய்
ஆனதினால் சந்நிதிக்கு
அடிமையாகினேன்.

**கே. எஸ். சிவஞானராஜா**

★ படகு நீரில் இருக்கலாம் ஆனால், நீர் படகிலிருத்தலாகாது. ★

உ [தொடர்ச்சி…

# சந்நிதி வெண்பா

உடுப்பிட்டி மணிப்புலவர்

சந்தத் தமிழ்விருப்பான் சந்நிதிக்க ணுற்றிருப்பான்
கந்தத் தொடையளிச்சங் காண்பொருப்பான் - எந்தத்
தருணத்து நாயேனைத் தாங்கியருள் செய்வா
னிருணத்து முள்ளத்தே னென்று.

சரவணத்தா யாறடுத்த சந்நிதியாய் சத்திக்
கரவணத்தாய் நீபங் கவின்கொ - ளுரவணத்தாய்
கன்னற் றமிழ்வணத்துன் காற்பூ வணம்பூட்டு
மந்நல் வணமெற் கருள்.

வேலிருக்குங் கைக்கருணை மேலிருக்குஞ் சாமிவலப்
பாலிருக்கும் வள்ளிப் பசுங்கொடியே - மாலிருக்கும்
நெஞ்சக் கடையனெனை நீக்காமற் சந்நிதியாய்
கஞ்சக் கடிமலர்த்தாள் காட்டு.

பாடித் துதிக்கும் பரிசறியேன் சந்நிதியி
லாடித் துணைசெய் யயிலரசே - யோடித்
திரிந்தலையு நாயாய்த் தினமுமலை வேன்மேற்
பரிந்திரங்காய் கண்கள் பனித்து.

என்றுமுனை நம்பி யிருக்கு மெனியேனுக்
கென்றருள வுன்னி யிருக்கின்றாய் - துன்றுசுவைக்
கான விசைக்குயிலார் காவோங்கு சந்நிதிவாழ்
ஞான வயிலாய் நவில்.

ஆற்றருகில் வாழு யறுமுகவா சந்நிதியில்
வீற்றிருளு மானந்த வெள்ளமே - காற்றினிலே
சிக்குற்ற மென்பஞ்சாய்ச் சிக்கிப் பவத்திலலை.
பக்குவமி லேனைக்கண் பார்.

சந்நிதிவாழ் வேலவனைத் தண்ணளியால் மேலவனை
யெந்நிதியு மீடில் லிறையவனை - யுன்னிதியாய்க்
கொண்டு சுகவாழ்வு கொள்ளுவது மென்றுகொலோ
தொண்டுபுரி யாமனமே சொல். [வளரும்

உ [தொடர்ச்சி......

# ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் திருத்தல புராணம்

## சீ. விநாசித்தம்பிப்புலவர் அவர்கள்

வானம் பொலிய் ஞாலம் பொலிய மாதர் பொலிய வளம்மிகும்
தானம் பொலிய மோனம் பொலியச் சாரும் பேறு தருமுயர்
ஞானம் பொலிய வள்ளி தெய்வ யானையோடு நறுந்தமிழ்க்
கானம் பொலியக் குலுங்கி யாடும் கந்தனின் காவடிகளே 126

செறிந்த தோகை யலம்பியாட செலுத்திய வேற்கயிறாட
சிறந்த தூப தீப மாடத் திகழு நாதச் சிலம்பாட
குறம்படிக்கு மடியராடக் குலவு மாத ரணியாட
கறந்த பாலின் கலசமாட காவடி நின்றாடுமே. 127

### வேறு

அரகர வெனவே அடியவர் ஒலித்துச்
சிரகரம் கொண்டு சிந்தைநெக் குருக
மரகத மயிலில் வள்ளிகுஞ் சரிசேர்
சரவண பவகுகன் சமுகம் தருவான். 128

### பத்திர சத்திர மூர்த்தி

பத்தினர் வேண்டும் பலனருள் செய்யப்
பத்திர முத்திரை பதித்திடு ஞான
சித்திர வேலொடு திருமுரு கையன்
வித்தக வீரனாய் வீதியில் வருவான். 129

போற்றிடு பூசனை பொருந்திய முருகன்
ஆற்றிய நெறியே அன்னதானங்கள்
பேற்றினிற் சிறந்த பெரும் பயனெனவே
ஏற்றிடு தொண்டர் இயற்றுவரினிதே. 130

[வளரும்...

★ அதிகாரத்தை விரும்பிச் சுதந்திரத்தை இழக்காதே. ★

# திருத்தல புராணம்

126. இத்தகைய காவடிகள் ஆடுவதனால் தேவர்கள் பொலிவு பெறுகிறார்கள், உலகம் இன்பமடைகிறது, பெண்களின் தெய்வீகத் தன்மை வளர்கிறது, தருமம் வளர்கிறது ஞானியரின் மோன தியானம் நிலைபெருகுகிறது. வள்ளி ஆட தெய்வயானையார் ஆட தமிழ் இசைவிளங்க கந்தன் புகழ் பெருகுவதைக் காணலாம்.

127. கந்தனின் காவடிகளிற் கட்டிய மயிலின் தோகையாட, அடியவரின் உடம்பிலே பாய்ச்சிய சிறுசெதில் (செடில்) வேலாட காவடிகளை ஆட்டும் பிடிகயிறாட ஆட்டுவார் ஆட அவற்றுடன் கூடிவரும் தீபதூபங்களாட, காலிற் சிலம்பிசைத்தாட காவடிகளுக்கேற்ற பாடல்களைப்பாடும் இசையாளர் ஆட கூடிவரும் பெண்களின் கூட்டமாட சுமந்துவரும் பாற்கலசங்களாட வீதியெல்லாம் காவடிகள் ஆடும்

128. முருகனுக்கு அரோகரா அரோகரா என அடியவர்கள் பெருஞ் சத்தமிட்டு தலைமேல் கைவைத்து உள்ளம் உருகி நிற்க பச்சைமயில் மேலே வள்ளி குஞ்சரிசமேதராக சண்முகப் பெருமான் காட்சி தருவார்.

## பத்திர சந்திர முர்த்தி

129. பத்தியாய் வேண்டுமடியார்க்குத் திருவருள் செய்வதற்காக சிறந்த வீரன் போல முருகன் பத்திரமுத்திரை வேலாயுதனாகத் திருவீதியில் எழுந்தருளுவார். பத்திரமுத்திரை சிகண்டிமுனிவர் ஐராவசு என்ற கந்தருவன் யானையாகச் 'சாபம்பெற்று கதிர்காமத்தில் அட்டகாசம் செய்தவேளை ஒரு வெற்றிலையை எடுத்து அவன்மேல் ஏவினார் அது வேலாகச்சென்று யானையின் சாபம் தீர்த்தது அதன் காரணமாகச் செல்வச் சந்நிதியில் முக்கோணவடிவில் சந்தனத்தின் மேல் வெற்றிலையை வேலில் ஒட்டி விடுவார்கள் இதுவே பத்திர முத்திரையாகும்

130. முருகனே முதன் முதல் அன்னதானம் செய்துகாட்டினார் (கதிர்காமரின் கண்முன்னே ஆலமிலையில் அமுது படைத்த வரலாறு முன்னே கூறப் பட்டது) ஆகையினாலே இந்தத்தலத்தில் செய்யும் தருமங்களில் சிறந்த தர்மம் அன்னதான தர்மம் என்பதை இங்கே வருகின்ற அடியவர்கள் தொண்டர்கள் மனதிற் கொண்டு அன்னதானப்பணியை விரும்பிச்செய்து வருவார்கள். இதனால் செல்வச்சந்நிதிக் கந்தனுக்கு அன்னதானக்கந்தன் என்ற பெயர் வந்தது.

உ

# கிளி சொன்ன கதை

சி. நவரத்தினம்

**நா**ன் காவிரிப் பூம் பட்டினத்தில் திருவெண்காடர் முத்தம்மை தம்பதியினருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தவன். நான் சிறுவயதிலேயே தாய் தந்தையரை இழந்தவன். பின்னர்



ஆதிலக்ஷ்மி ஆகிய எனது தமக்கையாருடன் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தேன். தாய் தந்தையரை இழந்த என்னை, நான் என்ன குற்றம் குறைகள் செய்தாலும் எனது அக்கா கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ இல்லை. காரணம் பார்ப்பவர்கள் 'பாவம் தாயில்லாப் பிள்ளையைக் கொடுமை செய்கிறாள்' எனக் கூறுவர் என்பதற்காக. கண்டிப்போ அல்லது தண்டனையோ பெறாத நான் தீய பழக்கங்களைப் பழகிக்கொண்டேன். ஒருநாள் மனவிரக்தி பெற்ற நான் திருவண்ணாமலைப் பெரிய கோபுரத்தில் ஏறி என் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணிக் கீழே குதித்தேன். என்ன ஆச்சரியம்! முருகப்பெருமான் என்னைத் தாங்கிப் பிடித்தார். அக்கணமே "என்னைப் பாடு" என்று கூறி எனது நாவில்தனது 'வேலால் சரவணபவ' என்று எழுதி ஜபமாலை ஒன்றைக் கொடுத்தார். அப்பொழுது நான் எப்படிப்பாடுவது என்று விளிக்க முருகப் பெருமானே "முத்தைத்தரு பத்தித்திருநகை" என்று அடியெடுத்துக் கொடுத்தார். உடனே நான் முத்து முத்தாய்த் திருப்புகழ் பாடிக் குவித்தேன். என் புகழ் உலகெங்கும் பரவியது. பிரபுடதேவா

ராஜன் என்ற மன்னனுக்கு இச் செய்தி எட்டியது. அம்மன்னன் என்னை அழைத்துத் திருப்புகழ் பாடும்படி கேட்க நானும் பாடுவேன் அவரும் மெய்யுருகுவார். இச்செயல் அரசனின் நண்பருள் ஒருவரான சம்பந்தாண்டானுக்குப் பொறாமையையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. சம்பந்தாண்டான் ஒரு தேவி உபாஸகன். அவன் அரசனிடம் சென்று என்னைச் சித்து விளையாட்டுக் காட்டி மக்களையும் அரசனையும் ஏமாற்றுவதாகவும், முருகனை என்னால் அரசனுக்குக் காட்ட முடியுமா? என்று சொல்லித்தான் தேவியின் அருளினால் தேவியைக் காட்டுவதாகவும் கூறி மக்களவையைக் கூட்டும் படி அரசனிடம் கேட்டுக் கொண்டான்.

மேலும் தோற்றவரை நாட்டை விட்டுத் துரத்தும் படியும் கேட்டுக்கொண்டார். அரசனும் அந்தப்போட்டியால் தேவியையும் முருகனையும் தான் நேரில் தரிசிக்கலாம் என்று நினைந்து அந்தத்திட்டத்திற்கு ஒப்புக்கொடுத்தான். என்னிடம் இது பற்றி அரசன் கேட்டபோது '' எல்லாம் முருகன் திருவருள் '' என்றேன்.

குறித்த தினத்தன்று மக்கள் திரண்டு நிற்க மன்னன் போட்டிக்கு நடுநாயகமாக நின்று போட்டியை ஆரம்பித்து வைத்தான். முதலில் சம்பந்தாண்டான் நெடுநேரமாகப் பாடினான் தேவியோ அவன் முன் தோன்றவில்லை. காரணம் அவன் அதிகாரத்துடனும் ஆணவத்துடனும் தேவியை அழைத்தான். தேவிவருவாளா? அடுத்து என்னைப் பாடும்படி அரசன் பணித்தான். நான் முருகனைக் காட்சி தரும்படி உள்ளம் உருகிப் பாடினேன். ஒரு விநாடி காட்சியளித்தான் முருகன். எல்லோரும் மெய் சிலிர்த்து அரோகரா அரோகரா என்று குரல் எழுப்பினர். தோல்வியுற்ற சம்பந்தாண்டான் அவமானத்தால் தலை குனிந்தான். பின்னர் நாடுகடத்தப்பட்டான்.

சிறிதுகாலத்திற்குப்பின் மீண்டும் சம்பந்தாண்டான் அரசனின் நட்பைப்பெற்று என்னைத் தீர்த்துக் கட்டத் திட்டந்தீட்டினான். எனவே அவன் அரசனிடம் சென்று தேவலோகப்பாரிஜாதத்தின் மகிமையைக் கூறி அதனைப் பெற்றுக் கொண்டால் நோய் நொடியின்றி என்றும் இளமையாக இருக்கலாம் அதைக் கொண்டு வரும் தகுதி தனக்குத் தான் உண்டு என்று அரசனிடம் சம்பந்தாண்டான் கூறினான். அரசனுக்குப் பாரிஜாதத்தை அடைய வேண்டும் என்ற ஆசை மேலோங்கவே, அவர் என்னிடம் வந்து தனது விருப்பத்தைச் சொன்னார். நானும் '' முருகன் திருவருள் '' என்ற படி புறப்பட்டுச்சென்றேன். என்னை அறியாமல் தன் சீடனொருவனை என்

கோபம் என்பது அரைப்பைத்தியமே.

னைப் பின் தொடரும்படி சம்பந்தாண்டான் அனுப்பினான். நான் திருவண்ணாமலைக்கோபுரத்தினுள் நுழைந்த போது ஒரு கிளியின் இறந்த உடலைக்கண்டு மந்திரம் சொல்லி கிளியின் உடலினுள் புகுந்தேன் தேவலோகத்தை நோக்கிப் பறந்தேன் எனது உயிரற்ற உடல் கோபுரத்தின் முன்னால் இருந்தது இவற்றையெல்லாம் கண்ணுற்ற அவன் சீடன் நடந்தவற்றையெல்லாம் சம்பந்தாண்டானுக்குக் கூறினான். இதுதான் தக்க தருணம் என்று கண்ட சம்பந்தாண்டான் அரசனிடம் சென்று நான் பாரிஜாதமலரைக் கொண்டு வர முடியாத படியால் திருவண்ணாமலைக் கோபுரத்தின் முன் இறந்து விட்டதாகவும் எனது உடல் அங்கு கிடப்பதாகவும் அரசனிடம் கூறினான். அரசன் மிகவும் மனம் வருந்திப்பின்னர் ஒருவாறு தேறி எனது உடலைத் தகனம் செய்தான்.

கிளியாக இருந்த நான் பாரிஜாத மலரைக் கொண்டு வந்தேன் பின்னர் என் உடலை நான் விட்டுச் சென்ற இடத்தில் தேடினேன் அது கிடைக்கவில்லை, என் ஞான திருஷ்டியால் நடந்தவற்றை அறிந்து கொண்டேன். கிளியாகவே சென்று மன்னனிடம் பாரிஜாத மலரைக் கொடுத்து நடந்தவற்றையெல்லாம் அவரிடம் தெளிவாகக் கூறினேன். மன்னர் சம்பந்தாண்டானைத் தண்டிக்க முற்பட்டார். நான் ''அவரைத் தண்டிக்க வேண்டாம் மன்னித்து விடுங்கள். அவனைத் தண்டிப்பதால் என் உடல் திரும்பக் கிடைக்குமா? என்று கூறினேன் நான் கிளியாக இருக்க வேண்டுமென்பது முருகப்பெருமானின் விருப்பம் போலுமென நினைந்து கிளி வடிவிலேயே இருந்து கொண்டு '' கந்தரனுபூதியைப் பாடி முடித்தேன். '' அருணகிரி! நீ சுகபதம்தா '' என்று பாடினாய்! சுகம் என்றால் கிளி என்று ஒரு பொருள் உண்டல்லவா! அது தான் உன்னைக்கிளியாக்கினேன் நீ திருத்தணிகை வந்து எனது கரத்தில் அமர்ந்திருப்பாயாக '' என்று முருகப்பெருமான் அருளினார். அப்படியே நானும் முருகப் பெருமானின் திருக்கரத்தில் கிளியாக அமர்ந்து கொண்டேன்.

இப்பொழுது தெரிகிறதா நான் யாரென்பது!
நான்தான் முதலில் அருணகிரியாக இருந்து பின்னர் கிளியாக
உடல் மாறிய அருணகிரிக் கிளியாவேன்.

---

பணியாளரும், நகைகளும் தகுந்த இடத்திலேயே வைக்கப்பட வேண்டும். சூடாமணி காலில் அணியப்படுவதுமில்லை, சிலம்பு தலையிற் சூட்டப்படுவதுமில்லை.

---

★ சிந்தனை ஆற்றல் மனித குலத்தை உயர்த்துகிறது. ★

'' உள்ளத்தனையது உயர்வு ''

# அகந்தையை அழிக்கும் மகா சிவராத்திரி விரதம்

செல்வி க. சசிலேகா



எமது வாழ்வில் இறையுணர்வையும் புனிதத்தன்மையையும் ஏற்படுத்தி வாழ்வை நெறிப்படுத்தி ஆத்மீகத் துறையில் முன்னேற உதவும் சாதனங்களில் விரதங்களும் முக்கியமானவையாகும். நமக்கு உரியன எனக் கருதும் எல்லாவற்றையும் இறைவனுடையவை என எண்ணுவதும் எல்லாம் அவனுக்கே என்று அர்ப்பணம் செய்வதும் எம்மைப் புனித வாழ்விற்கு இட்டுச்செல்லும் படிமுறைகளாகும். இறை பக்தி காரணமாக மனங் கசிந்து உள்ளுருகும் நலம் பெறுதலே நாம் பெற்ற மனிதப்பிறவியின் தலையாய பேறு எனப் பெரியோர் கருதுவர். அதனாலேயே மணிவாசகர் சிவபுராணத்திலே,

கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி. எனக்குறிப்பிட்டுள்ளார்.

விரதமானது சைவ மக்களின் அகத்தூய்மையையும் புறத்தூய்மையையும் வளர்ப்பதற்கு வாய்ப்பாக அமைவதுடன் மற்றவர்களுக்குதவும் பண்பையும் வளர்க்கின்றது. மனிதனை ஆட்சி செய்யும் குணங்கள் மூன்று உள்ளன. சோம்பலும் சோர்வும் மிக்கத் தாமசகுணம், கோபமும் தாபமும் மிக்க இராசத குணம், சாந்தமும் அமைதியும் நிறைந்த சாத்துவ குணம் என்பனவே அவையாகும். அவற்றுட் சிறந்ததான சாத்துவகுணம் மேலோங்கி நிற்பதே உத்தமமானது. அவ்வாறு சாத்துவ குணம் எமது உள்ளத்திலே மேலோங்குவதற்கு விரதங்கள்

பெரிதும் உதவுகின்றன. விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் எமது வாழ்வில் அமைதியும் சாந்தமும் ஏற்படுகின்றன.

மனிதன் தொழிற்படுவதற்கு மனம்,மொழி மெய் ஆகிய மூன்று முக்கிய கரணங்கள் பயன்படுகின்றன. இவை திரிகரணங்கள் என்று கூறப்படும். இவை மூன்றும் இணைந்து இறையருளை நாடி நிற்கும் நிலை உயர்வானது. எமது தொழிற்பாடுகள் புனிதத் தன்மையுடன் விளங்குவதற்கு திரிகரண சுத்தி அவசியமாகும். நாம் திரிகரண சுத்திக்கு எம்மைப் பயிற்றுவதற்கான சந்தர்ப்பங்களாக விரதங்கள் விளங்குகின்றன. வாழ்க்கைக்கும் உயரிய நோக்கத்தை அடைவதற்கும் சமய சாதனை மேலானது கடவுள் அருளைப் பெறுவதற்கு நாம் மேற்கொள்ளும் ஆசார அனுட்டானங்களும் பக்தி முறையான வழிபாடுகளும் உதவுகின்றன. இவை விரதங்கள் முதலியவற்றினூடாகவே கடைப்பிடிக்கப்படுகின்றன.

விரதத்திற்கு உபவாசம் என்னும் ஒரு பெயரும் உண்டு. உபவாசம் என்பது பட்டினி கிடப்பது என்ற பொருளில் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் இறைவனோடு மிகவும் நெருங்கியிருந்து வழிபடுவதும் இறைவனின் சிந்தனையோடு இருப்பதுமே சரியான பொருளாகும். சமயப்பெரியாரான ஆறுமுகநாவலரது கருத்துப்படி ''விரதமாவது மனம், பொறி, வழிப்போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி வழிபடுதல்'' என்பதாகும். அதாவது முக்கரண சுத்தியோடு இறைவனை மெய்யன்போடு வழிபடுதலாகும்

விரதங்கள் - சிவவிரதம், சக்தி விரதம், விநாயக விரதம் முருக விரதம் எனப்பலவகையின இவற்றுள்ளும் சிவ விரதங்கள் பலவற்றுள் ஒன்றாக விளங்குவது மகா சிவராத்திரி விரதம் ஆகும். இத்தொடரின் கருத்து பெருமை மிக்க சிவனுக்குரிய இரவு என்பதாகும். இவ்விரதம் ஆண்டு தோறும் மாசி மாதத்தில் வரும் தேய்பிறை பதினான்காம் திதியில் அதாவது கிருஷ்ண பட்சத்து சதுர்த்தியில் வரும் விரதமாகும். இது செல்வச் செருக்குக்கும் கல்விச் செருக்குக்கும் எட்டாதது பரம் பொருள் என்பதையும் அந்த மேலான பரம் பொருள் சிவபெருமானே என்பதையும் எமக்கு விளக்கி நிற்பதோடு பிரமாவும் விஷ்ணுவும் அடி முடி தேடிய வரலாற்றையும் எமக்குணர்த்தி நிற்கின்றது.

முன்னொரு பொழுது சரஸ்வதி நாயகனாகிய பிரமா உலகங்களையும் அங்கே இயங்கும் உயிர்களின் அழகிய உடல்களை

யும் அவை நுகரும் போகப் பொருள்களையும் பார்த்தார். "இவற்றை எல்லாம் நானன்றோ படைத்தேன். என்னில் மேலான வேறொரு கடவுள் இல்லை; நானே பரம்பொருள்" என்று செருக்குற்றார். இவ்வாறு செருக்குற்ற பிரமா இலக்குமி நாயகனாகிய திருமாலிடம் சென்றார். அவர் பாற்கடலிற் பள்ளி கொண்ட வண்ணம் இருந்தார். பிரமா அது கண்டு "என் வரவையும் மதியாது நித்திரை செய்கிறாயே எழுந்திரு" என்று சொல்லி அவருடைய மார்பிலே குத்தினார். திருமால் எழுந்த போது "நீ யார்? சொல்" என்று பிரமா அதட்டினார். "மைந்தனே! என்னைத் தெரியாதா? நான் தான் உனது தந்தை" என்றார் திருமால். பிரமாவுக்கு இதைக் கேட்டதும் சிரிப்பு உண்டாயிற்று. உனக்கு இன்னும் நித்திரை முறியவில்லைப் போல் இருக்கிறது. வீணாகப் பிதற்றாதே; நீ எனக்குத் தந்தை என்ற செருக்கை விட்டு விட்டு நீ பத்துப் பிறப்புக்கள் எடுத்தாயே! உன்னுடைய அந்தப் பத்துப் பிறவிகளுக்குமுரிய உடல்களைப் படைத்ததனால் என் கைகளும் கன்றி விட்டன. இதோ பார்" என்றார் பிரமா.

திருமாலுக்குக் கோபம் வந்தது "பரமசிவன் கிள்ளிய உன் தலையை நீ இன்னும் படைத்துக்கொண்டாயில்லை. அப்படிப்பட்ட நீயா என் பிறவிகளைப் படைத்தாய்? உன் பேச்சு வேடிக்கையாக இருக்கிறது. நானின்றி உலகில் எந்தப்பொருளும் உண்டாகாது. நாரணனும் நான்; அந்தப்பரமசிவனும் நான் யாவையும் நான்" என்று திருமால் பலவற்றைக் கூறினார். வாக்குவாதம் முற்றிக் கைகலப்பு ஏற்பட்டது. போர் சற்றுந் தளராது நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது அவர்களுடைய செருக்கை அடக்கிச் செம்மனத் தராக்கச் சிவபெருமான் திருவுளம் கொண்டார்; இருவருக்கும் இடையே ஒரு பெரிய சோதிப் பிழம்பாகத் தோன்றினார். திருமாலும் பிரமாவும் நடுநடுங்கிப் போர் விடுத்துப் பயந்து நின்றனர். அப்பொழுது "சிறுவர்களே! உங்கள் வலிமையைக் காட்ட இச்சோதி மலையின் அடியையும் முடியையும் காணுங்கள்" என்றொரு விண்வாக்கு எழுந்தது.

திருமால் பெரியதொரு பன்றி வடிவங்கொண்டு அடியைத் தேடிக் கீழே அகழ்ந்து செல்ல பிரமா அன்னப்பறவை வடிவங் கொண்டு முடியைத்தேடி மேலே பறந்து சென்றார். ஆயிரமாயிரம் ஆண்டுகள் தேடியும் அடியைக் காணாது திருமால் பூமியின் மேலே வந்து சோதிக்கு அண்மையில் ஒதுங்கி நிற்க முடியைக் காணாத பிரமாவும் அவ்விடம் சேர்ந்தார். செருக்கொழிந்த இருவர் மனமும்

இறைவனிடத்திலே சரணடைந்தன. ஒரு சிவலிங்கம் அமைத்து இருவரும் வழிபாடு செய்தனர். அப்பொழுது சிவபெருமான் தோன்றி அவர்களுக்கு அருள் புரிந்தார்; பின் சோதியினுள் மறைந்தருளினார். சோதியும் சுருங்கி ஒரு சிறு மலையாக அமைந்து நின்றது. இப்புராணக் கதையை உணர்த்துவதாக அப்பர் பாடிய,

திருச்சிற்றம்பலம்

"செங்கணனும் பிரமனுந் தம்முள்ளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற்றே னென்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடை புண்ணிய மூர்த்தியே"

என்ற பாடலும்,

சம்பந்தர் பாடிய

"தொழுவார் இருவர் துயரம் நீங்கவே
அழலாய் ஓங்கி அருள்கள் செய்தவன்
விழுவார் மறுகில் விதியால் மிக்கவெம்
எழிலார் கோற்றுத் துறை சென்றடைவோமே"

என்றபாடலும்

சுந்தரர் பாடிய

"அயனோடன் றரியும் அடியும் முடியும் காண்பரிய
பயனே யெம் பரனே பரமாய பரஞ்சுடரே
அயமாருஞ் சடையாய் கடவூர்த் திருவிரட்டத்துள்
அயனே யென்னமுதே யெனக்கார் துணை நீயலதே.

திருச்சிற்றம்பலம்

என்ற பாடலும் அமைந்துள்ளமையைக் காணலாம்.

சிவராத்திரி விரத மகிமை பற்றிக் கூறும் நூல்களாக சிவராத்திரிபுராணம், இலிங்கபுராணம் முதலிய இலக்கியங்கள் விளங்குகின்றன. இவ்விரதத்தினை அனுட்டிப்பவர்கள் சிவராத்திரிக்கு முந்திய தினம் ஒரு வேளை உணவுண்டு சிவராத்திரி தினத்தன்று உபவாசம் இருந்து மறுநாள் அதிகாலை பாரணை செய்வர். மேலும் இத்தினத்தன்று இரவு பூராகவும் விழித்திருந்து இலிங்கோற்பவ காலத்திலே சிவபிரானை விசேடமாக வழிபடுவதிலும் புராணபடனம், திருமுறை ஓதுதல் ஆகியவற்றைக் கேட்பதிலும் நேர்த்தியைக் கழித்துநான்குயாமமும் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும். இரவு பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவ காலம் எனப்படும். முழுநேரமும் நித்திரை விழிக்க இயலாதவர்கள் இலிங்கோற்பவ

காலம் முடியும் வரையாவது நித்திரை ஒழித்தல் வேண்டும்.

எமது நாட்டிலே பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகிய திருக்கேதீச்சரத்தில் இவ்விரதம் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அடியார்கள் பாலாவியில் நீராடி ஈர உடையுடன் வெள்ளிக்குடத்திலே நீர் கொணர்ந்து மகாலிங்கப் பெருமானுக்குத் தாமே அபிடேகம் செய்யும் காட்சி வேறு எத்தலத்திலும் காண முடியாததொன்றாகும். இத்தகைய சிறப்புமிக்க இந்நாளிலே நாமும் மெய்யன்போடு விரதமிருந்து எம் உள்ளத்திலேயுள்ள அகந்தைகளைப் போக்கி நற்கதியடைவோமாக!

அன்பே ,சிவம்

முற்றிற்று

## அகவை ஆறிலிலே காலடி வைக்கும்
## அன்பான ஞானச்சுடரை
# ஞாலம் போற்ற வாழ்த்துகிறேன்!

சந்நிதியான் அருள் நலத்தால் தமிழர்
சரித்திரத்தில் இடம்பிடித்த
''சிந்தனைத் தேனாறே'' ஞானச்சுடரே!
செந்தமிழாய் வாழி! வாழி!
இந்நாட்டில் ''சைவ வாழ்வு'' தழைத்தோங்க
எந்நாளும் பேருரை, வைத்தியசேவை, அன்னதானம்
வந்தனைக்குரிய பணிகள் காத்திடும் பேரவையே!
வரலாற்றில் இடம்பிடித்தாய் வாழி! வாழி!

சைவ

எழுச்சியின் திறவு கோலே - தமிழர்
எண்ணத்தின் நாற்றாங்காலே!
விழிப்புற்ற சைவத்தமிழ் தாயகத்தின்
விடிவெள்ளித் தூதே! நாங்கள்
தொழுகின்ற இறையே! வாழ்வின்
தொகைநூலே! ஏழைத் தோழன்
அழுகையை அழித்த பாட்டே
அகிலமா மறக்கும் உன்னை!

**காரை. எம். பி. அருளானந்தன்**

★ துன்பங்களே சான்றோரை அளக்கும் அளவுகோல் ★

# நாம் செய்ய வேண்டியது ......

S. குணாகரன்

மத மாற்றத்தோடு தொடர்புபட்ட ஓர் ஆக்கம் 17 - 02 - 2003 உதயன் பத்திரிகையில் ''வில்லவன்'' எனும் பெயரில் பிரசுரிக்கப்பட்டிருந்தது அவ்ஆக்கத்தின் சாராம்சம் என் மனதினைத் தொட்டவகையில் மனதில் எழுந்த கருத்தினை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

அவ் வகையில் ஒரு காலத்தில் இந்து சமயத்தைச் சார்ந்த நம்மில் சிலர்பட்டம், பதவியைக் கருத்திற் கொண்டு மதம் மாறி தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்தனர். ஆனாலும் அன்றைய காலகட்டத்தில் ஆறுமுக நாவலர் போன்றோரின் சமயப்பிரசாரத்தாலும் அவர்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாகவும் மத மாற்றம் ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டது.

ஆனால் இன்று நாட்டில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக பலர் மத மாற்றத்திற்கு உள்ளாகி விட்டார்கள் என மேடைகளிலும், கூட்டங்களிலும் பேசுகின்றோமே தவிர, மதமாற்றம் ஏன்? எப்படியான சூழ்நிலையில் நடைபெறுகின்றதுஎன்பதைப் பற்றி ஒருவரும் சிந்திப்பதில்லை. காரணம் தெரியாதது போல் நடிக்கின்றோம். உண்மையில் எங்களுக்கு மத மாற்றம் ஏன் நடைபெறுகின்றது என்பது தெரிந்துள்ள விடயமே.

எமது சூழலில் உள்ள மக்களின் வாழ்க்கை நிலையினை நாம் உற்றுநோக்குவோமானால் மதமாற்றத்தின் உண்மை நிலை புரியும். கடந்த காலங்களில் தமது சுயதேவைகளுக்காக மதம் மாறிய எம்மவர்கள் இன்று தங்களது நாளாந்த வாழ்க்கையினை ஓட்டிச்செல்வதற்கு ஒரு கொழுகொம்பாக இம் மதமாற்றத்தைப் பயன்படுத்துகிறார்கள் அதற்கமைவாக எம் மக்களுக்கிடையே ஊடுருவும் பிற மதத்தினர் அற்ப சொற்ப சலுகைகளை வழங்கி இலகுவாக மத மாற்றத்திற்குட்படுத்துகின்றார்கள்.

இதனை நாம் பார்த்துக் கொண்டு இருப்பதனாலோ, மேடைகளில் முழங்குவதினாலோ, கருத்துக்களை வெளியிடுவதனாலோ எவ்வித முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. நடைபெற்றுக் கொண்டிருக்கும் மதமாற்றத்தினைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் யாழ் குடாநாட்டில் உள்ள இந்து ஆலய நிர்வாகத்தினரும், சமய நிறுவனங்களும் ஒன்றிணைந்து.

★ நினைப்பதெல்லாம் சரி என்று முடிவெடுக்காதே. ★

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாம் செயல்'' என்னும்

வள்ளுவர் வாக்குக்கமைவாக தங்களைச் சூழவுள்ள நலிவுற்ற மக்களை இனம் கண்டு அவர்களின் நாளாந்த தேவையினைப் பூர்த்தி செய்ய முயன்றோமானால் இம் மதமாற்றத்தை ஓரளவேனும் கட்டுப்படுத்தலாம்

இதனைக் கருத்திற் கொண்டு இந்து கலாச்சார அமைச்சின்மூலம் ஆலயப் புனருத்தாரனத்திற்காக ஒதுக்கப்படும் நிதிகளில் ஒரு சிறுபகுதியினை அவ் அவ் ஆலயங்கள் அமைந்த பிரதேச மக்களின் நலன் கருதி மேற்படி ஆலய நிர்வாகங்களோ, இந்து சமய அமைப்புக்களோ பயன் படுத்த முன்வரவேண்டும் முழுநிதியினையும் ஆலயத்திற்கு பயன்படுத்தாமல் கஸ்றமுறும் குடும்பங்களை இனம் கண்டு. அவர்களின் தேவைகளைக் கேட்டு, அக்குடும்பங்களை சுய தொழிலில் ஈடுபடச் செய்வதன் மூலம் அவர்களது சிந்தனை திசைமாறிச் செல்லாது தடுப்பதன் மூலமும் நாம் இதனைச் செய்லாம் இதற்கமைவாக இந்து கலாச்சார அமைச்சும் தாம் வழங்கும் நிதியின் ஒரு பகுதியினை இவ் வகையான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்த வேண்டும் என்று நிதியினைக் கோரும் அமைப்புக்களுக்கு நிபந்தனை விதித்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அப்படியான நிலை ஏற்படும் பட்சத்தில் ஆலயமும், அப்பிரதேச மக்களும் ஒன்றிணைந்து நிற்பதன் மூலம் அச்சூழலில் மத மாற்றம் எனும் நிகழ்வு இடம் பெறாது என்பது திண்ணம். பிற மதத்தினர் உட்புக அஞ்சுவார்கள். இதனை சம்பந்தப்பட்டோர் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பது எனது அவா.

மேலும் சந்நிதியான் ஆச்சிரமப் பேரவையினரால் வெளியீடு செய்யப்படும் ஞானச்சுடரின் தைமாத இதழில் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற் கொள்ளப்படும் பலவித செயற்பாடுகள் அனைத்தையும் அறியக் கூடியதாக இருந்தது. அச்செயற்பாடுகளை நாம் உற்று நோக்கும் போது சந்நிதி ஆலயத்தைச் சூழவுள்ள மக்களுக்கிடையே பிற மதத்தினரின்ஊடுருவல் ஏற்படக் கூடாது என்ற எண்ணத்தினை அடிப்படையாக வைத்து ஆச்சிரமமும்.பேரவையும் செயற்பட்டுக் கொண்டிருப்பதனை நாம் அறியக் கூடியதாகவுள்ளதுடன், இப்படியான செயற்பாடுகள் மூலம் மதமாற்றத்தைக் கட்டுப்படுத்த முனைப்புடன் செயற்படுவோமாக.

# ஔவையார் அருளிய ஆத்திசூடி

(உரையும் விளக்கமும்)

(தொடர்ச்சி...

**அனந்த லாடேல்**

அனந்தல்- நித்திரையை, ஆடேல்- (நீ அதிகமாகச்) செய்யாதே. (அனந்தல் - கள் மயக்கமுமாம்)

அளவுக்கு அதிகமாகத் தூங்காதே, சிலர் பகலிலும் இரவிலும் அதிகநேரம் தூங்குவார்கள். இத்தகைய சோம்பேறிகளால் எந்தக் கடமையையும் சிறப்பாகச் செய்ய முடியாது. எனவே அளவுக்கு அதிகமாகத் தூங்காதே என்று நமக்குப் புத்தி கூறுகிறார் ஔவைப் பாட்டி. (31)

**கடிவது மற**

கடிவது - (ஒருவரைச்) சினந்து பேசுவதை, மற - நீ மறந்து விடு

பிறர் மனம் புண்படும்படி கடுமையாக எப்போதும் நடந்து கொள்ளாதே கோபம் கொள்வதை மறந்துவிடு (32)

**காப்பது விரதம்**

காப்பது (உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல்) அவைகளைக் காப்பாற்றுவதே, விரதம் - விரதமாம்.

நாம் ஒரு காரியத்தைச் செய்வதாக முடிவு செய்து கொண்டோமானால் அதைக் காப்பாற்ற வேண்டும், கை விடக்கூடாது (33)

**கிழமைப் படவாழ்**

கிழமைப்பட- (உன்னிடத்தில் உள்ள பொருள்கள் பிறருக்கும்) உரிமைப்படும்படி, வாழ் - நீ வாழு.

கிழமை-உரிமை உன்னிடத்தில் உள்ள செல்வம் மற்றவர்களுக்கும் உரிமைப்படும்படி நீ வாழ்வாயாக. உடலாலும், உள்ளத்தாலும் உடைமையாலும் பிறருக்கு நன்மை செய்து வாழவேண்டும். அத்தகையோரை எல்லோரும் பாராட்டுவார்கள் (34)

உ

# சந்நிதியான்

- ந.அரியரத்தினம் -



சந்நிதியான் காக்கும் கடவுளாக கருணை மழை பொழிகின்றான் என்பதையும், அருளாளர்கள் பிறருக்காக வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் விளக்குகின்ற ஒரு சம்பவத்தை அடியார்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

சிதைவடைந்திருந்த ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தை புனரமைத்து 1987 ஆம் ஆண்டு மீண்டும் நித்திய பூசை ஆரம்பிப்பதில்பெரும் பங்காற்றியவர் இறைபதம் அடைந்த முருகேசு சுவாமிகளாவார்.

இவ்வாறு சந்நிதி ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளைச் செய்து முடித்த முருகேசு சுவாமிகள் சில ஆண்டுகளின் பின் ஆலயத்தின் பிரமாண்டமான முன் மண்டபத்

தின் தூண்கள் ஆங்காங்கே உடைவடைந்தும் பொலிவிழந்தும் காணப்பட்டமையால் அதனையும் செப்பனிடுவதற்கு திருவுள்ளம் கொண்டார்கள் அந்தத் தூண்களில் சிதைவுற்றுள்ள மேற்படையைச் செதுக்கி அந்த இடங்களுக்கு சீமேந்து பூசிச்செப்பனிடுவதே பொருத்தமானதெனவும் முடிவுசெய்யப்பட்டு அதற்கான வேலைகளும் 1994 ஆம் ஆண்டு நடுப்பகுதி அளவில் ஆரம்பிக்கப் பட்டன.

வேலையின் முதற்கட்டமாக சிதைவடைந்திருந்த பகுதிகளை தூண்களில் இனம் கண்டு தொழிலாளர்கள் அவற்றை சீமேந்து இடுவதற்கு வசதியாக செதுக்குகின்ற செயற்பாட்டை ஆரம்பித்துவிட்டனர்.

ஆனால் அவர்கள் மேற்கொள்ளுகின்ற அந்தச் செயற்பாடு விபரீதமாக முடிவடையப் போவதை அப்பொழுது எவருமே உணரவில்லை. மிகவும் பழமை வாய்ந்த பிரமாண்டமான தூண்களையும், மிக உயரமானகோப்பிசத்தையும் உடைய அந்த மண்டபத்தின் தூண்கள் தனிச் சுண்ணாம்பினாலேயே அமைக்கப்பட்டிருந்ததினால் அவற்றின் பாவனைக் காலம் முடிவடைந்து கோப்பிசத்தைத் தாங்கும் சக்தியை இழந்திருந்தது இந்தநிலையில் தூண்களில் செய்த செதுக்கல் வேலையால் கோப்பிசம் முழுவதும் குடைசாயும் ஆபத்து நிலை அங்கே உருவாகியது.

இவ்வாறு மண்டபம் விழுவதை நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்தவர்களும் விழுகின்ற சத்தத்தைக் கேட்டவர்களும் மற்றும் சம்பவத்தைக் கேள்விப்பட்டவர்களும் பதைபதைப்புடனும், பாரியசத்தத்துடனும் அங்கே ஓடிச்சென்று ஒன்று கூடினார்கள்.

வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்தவர்கள், அந்த மண்டபத்தில் வழமையாக தங்கி ஓய்வெடுத்துக் கொள்பவர்கள் எனப் பலவகைப்பட்டவர்களும் ஒரே நேரத்தில் ஒன்று கூடுகின்ற மண்டபமாக முகப்பு மண்டபம் விளங்குகின்றமையால் அதற்குள் யார் யார் அகப்பட்டிருப்பார்களோ என்ற அச்சத்துடன் அங்கு ஒன்று கூடியவர்கள் அனைவரும் இடிந்து விழுந்த கோப்பிசத்தின் உட்பகுதிக்குள் மிகவும் கஷ்டப்பட்டு தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அப்பொழுது வேலை செய்து கொண்டிருந்தவர்களைப் பற்றிய கவலை அதிகமானவர்களுக்கு ஏற்பட்டதனால் அவர்களைப் பற்றி ஆராய்ந்த பொழுது முதல் தூண் இடிந்து விழுகின்ற சமயத்தில் அதன் அருகில் நின்று வேலை செய்து கொண்டிருந்தவர் தூண் இடிந்து விழ ஆரம்

பித்த பொழுது தானும் ஏனைய தொழிலாளர்களும் விரைவாக அங்கிருந்து வெளியே வந்ததை யும் தங்களில் எவருக்கும் எந் தப்பாதிப்பும் ஏற்படவில்லை என்பதையும் வெளிப்படுத்தி னார்கள்.

அதே போன்று ஆலயத்தில் வழிபட்டுக் கொண்டிருந்தவர்கள் மண்டபத்தினுள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்கள் என ஒவ் வொரு பகுதியினரும் தாங்களும் தெய்வாதீனமாக எந்த விதமான பாதிப்புக்களும் இல்லாது தப்பித் துக் கொண்டமையை வெளிப் படுத்திய அதே நேரம் மண்டபம் இடிந்து விழுகின்ற நேரத்தில் மண்டபத்தினுள் 5 வயது மதிக் கத்தக்க குழந்தை ஒன்று விளை யாடிக் கொண்டிருந்ததை அனை வரும் பார்த்திருந்ததையும் தற் பொழுது அந்தக் குழந்தையை வெளியே காணவில்லை என்ப தையும் எல்லோரும் உறுதிப் படுத்திக் கொண்டனர். இந்த நிலையில் பிள்ளைக்கு ஏற்பட் டுள்ள விபரீதத்தை எல்லோரும் உணர்ந்து கொண்டனர்.

எல்லோருடைய முகத்திலும் பயமும் சோகமும் ஏற்படத் தொடங்கியது. ஆனாலும் ஒரு சிலர் மிகத்துரிதமாகச் செயற் பட்டனர். அக்குழந்தை விளை யாடிக்கொண்டிருந்த இடம் எனக் கருதப்பட்ட இடத்தை நன்கு உறுதிப்படுத்தி அந்த இடத்தை நாடிச்சென்று தரையில் சாய்ந் திருந்த கோப்பிசத்தை கவன மாக ஆராய்ந்து பார்த்தனர்.

என்ன அதிசயம்! அந்தக் குழந்தையின் தலையில் இருந்து சரியாக ஒரு அங்குல உயரத்தில் கோப்பிசம் தடைப்பட்டு நிற்ப தையும் பேயறைந்த நிலைஎன்று குறிப்பிடுவது போல எதுவுமே பேசமுடியாத நிலையில் அந்தக் குழந்தை காணப்பட்டதையும் கண்டு கொண்டவர்கள் உடன டியாக பாதுகாப்பான முறையில் குழந்தையை மீட்டு எடுத்தனர். அந்தக் குழந்தைக்கும் எந்த வித காயமோ, ஆபத்தோ ஏற்படாததைக் கண்ட அனை வரும் உணர்ச்சி மேலீட்டால் சந்நிதி முருகா! ஆற்றங்கரை வேலா! கலியுகக்கந்தா! என முருக நாமங்களை உச்சரித்த வண்ணம் ஆனந்தப் பரவசத்தில் மூழ்கிப்போயினர். இன்னும் சிலர் சந்நிதியானுடைய கருணையின் தனித்துவத்தை தமக்கிடையே உணர்வுபூர்வமாக பரிமாறிஆனந் தக் கண்ணீர் சொரியலாயினர்.

அப்பொழுது அங்கே பிரசன் னமாக இருந்த ஆலயத்திருப் பணிச்சபையினர், ஆ. அருணா சலம் அவர்கள், கோயிற் பூசகர் கள், தரிசிக்கவந்த அடியார்கள் என அனைவரும் கூட்டம் கூட்ட மாக நின்று தங்களுக்கிடையே பின்வருமாறு உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து தனி யார் பஸ்மூலம் ஆலயத்தைத்

தரிசிக்க வந்தபாடசாலை மாண வர்கள் ஆலயத்தின் உள் மண்ட பம், வெளிமண்டபம் என்பவற் றில் பெருந்தொகையான அள வில் வழிபட்டபின் திரும்பிச் சென்ற சில நிமிடங்களே சென் றுள்ளன. அவர்கள் சென்ற பின்பே இந்த நிகழ்வு இடம் பெற்ற அதிசயத்தை ஒரு பகுதியி னர் எடுத்து விபரித்து அவர்கள் காப்பாற்றப்பட்ட அதிசயத்தை வியப்புடன் எடுத்துக் கூறினர்.

இன்னும் சிலர் இவ்வாறான திருத்த வேலைகளைச் செய்யாது விட்டிருந்தால் பூசை நடைபெற் றுக்கொண்டிருக்கும் பொழுதோ அல்லது உற்சவகாலத்திலோஇது தானாக விழுந்திருந்தால் எவ் வளவு அடியார்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கும் எனவும் பேசிக்கொண்டனர்.

மண்டபத்தின் திருப்பணியை முருகேசு சுவாமிகள் மூலம் ஆரம் பிக்க வைத்து தானாக இடிந்து விழவேண்டிய கட்டிடத்தை திருப் பணிஎன்ற செயற்பாட்டின் பெய ரால் இடிந்து விழச்செய்து எந்த வித ஆபத்தோ பாதிப்போ ஏற் படாது சந்நிதியான் நிகழ்த்திய திருவிளையாடல் தான் இது என முருகேசு சுவாமிகளுடன் மிக நெருக்கமாக பழகுகின்றவர்கள் தமக்கிடையேபேசிக் கொண்ட னர்.

மண்டபம் குடைசாய்ந்த விதத்தினை அங்கு வேலையில் ஈடுபட்ட தொழிலாளர் ஒருவர் விபரிக்கும் பொழுது ''நாம் பாரமான பொருளை மேலிருந்து இறக்கும் பொழுது எவ்வளவு கவனமாகவும் செங்குத்தாகவும் இறக்குகின்றோமோ அதேபோல அந்த மண்டபத்தின் கோப்பிச மும் சிறிது சிறிதாக கீழே இறங் கியது தமக்கு அதிசய காட்சி யாகவே இருந்தது'' என வியப்பு டன் குறிப்பிட்டார்.

முருகேசு சுவாமிகள் சந்நிதி யானுடைய திருப்பணிவேலைகள் சந்நிதியானுடைய பூசைச்செயற் பாடுகள், சந்நிதி ஆலயச்சூழலின் அன்னதானச் செயற்பாடு என அனைத்துச் செயற்பாடுகளுக்கா கவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்த தன்னிகரில்லாத அருளாளர்.

1987-ஆம் ஆண்டு காலகட் டத்தில் சந்நிதியில் மோசமான இராணுவச் செயற்பாடு காரண மாக நித்திய பூசை நடைபெறா திருந்த காலகட்டத்தில் தான் சோறு உண்பதை கைவிட்டது மட்டுமன்றி மீண்டும் நித்திய பூசை ஆரம்பிக்கும் வரை அந்த விரதத்தை இறுக்கமாகக் கடைப் பிடித்த அருளாளர்.

அப்படிப்பட்ட அருளாளரால் ஆரம்பிக்கப்பட்ட ஆலயத்திருப் பணியால் ஆபத்து ஏற்பட முடி யுமா அது மட்டுமா திருத்த வேலை என ஆரம்பிக்கப்பட்ட வெளிமண்டபம் இன்று புதுப் பொலிவுடன் புதிய அமைப்புடன் புதிதாகக் காட்சி தருவதற்கும் காரணமானவர் முருகேசு சுவாமி கள் அல்லவா! ஓம் முருகா!

# அரை நிமிட நேரம்

சி. யோகேஸ்வரி

என்னைச் சுற்றி எத்தனை உறவுகள்! எவ்வளவு உடைமைகள்!

அன்பான மனைவி, கொஞ்சிக் குலாவும் பிள்ளைகள், அன்பு மிக்க உறவினர்கள், உற்ற நண்பர்கள் என இவர்கள் எல்லோரும்என்னைச்சூழ இருக்கும் என் உறவுகளாக உள்ளனர். அவர்கள் என்மேல் மிகுந்த அன்பு கொண்டவர்கள். அந்தப் பாசத்திற்கு நான் கட்டுப்பட்டவன்.

நான் என் விருப்பத்திற்கேற்றவாறு எவ்வளவோ திட்டமிட்டு, மிகவும் சிறப்பாக இந்த வீட்டைக் கட்டினேன். இது என்னுடைய வீடு. இதைவிட்டு வேறெங்கும் செல்ல என்னாலியலாது. அந்த வீட்டின்மேல் அந்த அளவிற்கு அளவுகடந்த பற்றுவைத்திருக்கிறேன்.

நான் பிறந்து வளர்ந்த ஊர் இது இவ்வளவு காலமும் நான் வாழ்ந்த ஊர் என்னுடைய ஊர். இந்த ஊரென்றால் எனக்கு மிகவும் விருப்பம். இதன் மேல் நான் வைத்திருக்கும் பற்று அளப்பரியது.

இந்த நாடு என்னுடைய நாடு. வற்றாத வளங்கொண்ட எனது நாட்டை நான் மிகமிக நேசிக்கின்றேன்.

எனது நாடு, எனது ஊர், எனது வீடு, எனது உறவுகள் என்னும் இவற்றிலெல்லாம் நான் வைத்திருக்கும் பற்று எத்தகையது என்பதை நான் விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை, அவற்றில் நான் கொண்டுள்ள பற்று மாற்றற்கரியது. என்னுடையது என்னும்போது என்னையறியாமலே ஒரு பற்றும் பந்தமும் ஏற்பட்டுவிடுகிறது.

இது மாற்றுவதற்கு மிகவும் கடினமான பற்று. வடமொழியில் 'அஹம்' என்றால் நான் என்றும், 'மம' என்றால் எனது என்றும் கருத்தாகும். அகங்காரம், மமகாரம் இரண்டும் எம்மை விட்டுப் போக வேண்டுமென்று தத்துவ நூல்கள் கூறுகின்றன. அதாவது நான், எனது என்னும் முனைப்புக்கள் எம்மை விட்டகலவேண்டும் என்பதாகும் ''நான் யார்?'' என்பதே சரியாகத்தெரியாத நான் என்னைப் பற்றி எப்படியெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்கிறேன்.

★ உடல் என்ற தேருக்கு இறைவனே தேரோட்டி. ★

" நான் பெரிய பதவியிலிருப்பவன் " "நான் பட்டங்கள் பெற்றவன் "
" நான் பணக்காரன் "

இவ்வாறு ஏதேதோ என்னைப் பற்றிக் கூறிக்கொள்கின்றேன். ஆனால் நான் எந்தக் கணமும் சவமாகி விடலாம் என்பதை மட்டும் மறந்து விடுகிறேன்

" எனது எனது " என்று எத்தனையோ பொருள்களையும் மனிதர்களையும் கூறிக்கொள்கின்றேன். ஆனால் அவை எத்தனை கணங்கள் என்னுடையதாக இருக்கப் போகின்றன என்பது இந்தக் கணத்தில் எனக்குத் தெரியாது. இன்னும் எவ்வளவு காலத்தில் அவை மறையப் போகின்றன என்பதும் தெரியாது. ஆம்! " எனது எனது " என்று நான் கூறிக்கொண்டிருப்பவையும் நிலையற்றவை. இவையனைத்தையும் புரியாது மமகாரம் மனதுள்ளே கிடந்து எவ்வளவு ஆட்டம் போடுகின்றது! இவை எமக்குரியவை அல்லவென நான் உணரும் வரை அவை எல்லாம் எனது என்றே மனது மகிழும்.

என்று 'அவை என்னுடையவை' என்று எண்ணுவது தவறு என்று 'புரிந்து கொள்கிறேனோ அன்றுதான் அப்படி மகிழாது என்னால் இருக்கமுடியும். புரிந்து கொள்வதால் மட்டும் இந்தத் தெளிவு ஏற்படுமென்று கூற முடியாது. பற்றறுக்கும் ஒரு நிலை ஏற்படவேண்டும். அல்லது இந்தப் பற்றும் பாசமும் எம்மை விட்டுப்போகாது.

அந்த இறைவனின் அடியிணைகளை வழிபட்டால் இப்பற்று எம்மை விட்டுப்போகும் எனப் பெரியோர் கூறுவர். பற்றற்றான் மேல்பற்று வைத்தால் ஏனைய பற்றுகள் விட்டுப் போகும் என்பார் வள்ளுவர்.

அவனருளாலேதான் அவனது தாளை வணங்க முடியுமென மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவார்.

அந்த அழகிய தாள்களை வழிபட அருள்செய் என்று வேண்டுதல் செய்துதான் அதனை வழிபட வேண்டும். தண்டையணிந்த சிவந்த கால்களை வழிபட அருள்புரிய வேண்டும் எனது என்று நினைத்தவைக்காக மகிழாதே அந்தச் சிவந்த அடிகளை வழிபட அருள்செய் ஐயனே. என்று வேண்டுவார் அருணகிரிநாதர். நாமும் அவ்வாறே இறைஞ்சி அந்தத்தாள்களை அரைநிமிடமாவது வழிபடுவோமா?

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிகரென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வானே...... (திருப்புகழ்)

★ உன் உள்ளத்தில் அன்பை பெருக்கிக்கொள். ★

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

07 - 03 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : இசைமணி சி. துரைராசா

**விடயம் : ' பண்ணிசை '**

வழங்குபவர் : திரு சி. தில்லைமணி (பக்கவாத்திய சகிதம்)

( நல்லை ஆதீன ஓதுவர் மின்சாரசபை யாழ்ப்பாணம் )

---

14 - 03 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு ச. லலீசன்

( பொறுப்பாசிரியர், இந்துமன்றம் சோமாஸ்கந்தக்கல்லூரி )

**விடயம் : மாணவர்கள் உரைகள்**

செல்வன் த. நிதர்சன் - **மானுடராதல் அரிது** ( தரம் - 6 )

செல்வன் சி. கோபிகிருஸ்ணா - **விழுப்பொருள்** ( தரம் - 12 )

( புத்தூர் சோமாஸ்கந்த )

செல்வன் பாலகுருநாதன் சக்த்திநாதன் - **தமிழ் முருகன்**

( சென்ஜோன்ஸ் கல்லூரி )

---

21 - 03 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை : திரு செ. பரமேஸ்வரன்

( ஆசிரியர் வசாவிளான் ம. மகா. வித்தியாலயம் யாழ். )

**சொற்பொழிவு : ' பகவத் கீதை '** ( தொடர் )

வழங்குபவர் : திரு அ. குமாரவேல்

( விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை )

---

28 - 03 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு
# பங்குனி - 2003

வெளியீட்டுரை : திரு சி. வைகுந்தராமி

( இளைப்பாறிய, அதிபர் )

மதிப்புரை : சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்

( உதவிப்பணிப்பாளர், இந்து கலாச்சார அமைச்சு )

பதிவு இலக்கம்:- Q. D. / 58 / NEWS / 2003

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2003 ஜனவரி- ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2004 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும். அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:

**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

செல்வச்சந்நிதி தொண்டைமானாறு